34

21 JUL 1931

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-உகூ.] பிரமோதூத வருஷ மாசிமீ [பகுதி-௪.

Vol. XXIX. *February-March 1931.* No. 4.


உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| வெண்பாமாலை யாராய்ச்சி:— | ஸ்ரீமத் டி. என். அப்பனையங்கார். | | கஉஎ |
| கம்பராமாயண இன் கவித்திரட்டு:— | ,, | வெ. ப. சுப்பிரமணியமுதலியார் | கஙரு |
| பெரியகாட்டு மட்டம் சாசனம்:— | ,, | சோமசுந்தரதேசிகர் | கசரு |
| கவிலவனார் சரித்திரம்:- | ,, | N. R கிருஷ்ணமூர்த்திஐயர் M.A. | கருக |
| அரும்பொருள் விளக்க நிகண்டின் முன்னுரை:— | ,, | S. வையாபுரிப்பிள்ளை B.A, B.L. | 9–32 |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.


வருஷசந்தா உள்நாட்டுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1931.

...JA M. DINAKARA BAHADUR AVL, and
...RU. NARAYANA IYENGAR, at the
...ress, No. 54, New Jail Road, Madura.


215020

38

## ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

## விளம்பரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் சமீபத்தில் அச்சிட்டு விற்பனைக்குச் சித்தம் செய்துவைக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விலை முதலிய விவரக்குறிப்பு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | வைத்தியசாரசங்கிரகம் (இரண்டாம்பதிப்பு) | ரூ. | 5—0—0 |
| 2. | மாறனலங்காரம் | ,, | 4—8—0 |
| 3. | வில்லிபாரதம் | ,, | 4—0—0 |
| 4. | அகப்பொருள்விளக்கம் | ,, | 1—4—0 |
| 5. | திருவாரூருலா. | ,, | 0—8—0 |
| 6. | திணைமாலை நூற்றைம்பது. | ,, | 0—8—0 |
| 7. | சேதுநாடுந் தமிழும். | ,, | 0—6—0 |
| 8. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி. | ,, | 1—4—0 |
| 9. | கூடற்புராணம் (முதற்பதிப்பு | | 0-10-0 |
| 10. | மதுரைத்திருப்பணிமாலை (மூன்றாம்பதிப்பு) | | 0—8—0 |
| 11. | பன்னூற்றிரட்டு (நான்காம்பதிப்பு) | | 3—0—0 |

தபாற்கூலி வேறு. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை. } லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

---

உ

கடவுள் துணை.

21 JUL 1931

# செந்தமிழ்.

தொகுதி—௨௯] பிரமோதூத ௵ மாசி ௴ [பகுதி-௪.
Vol. XXIX. February-March-1931. No. 4.

## வெண்பாமாலையாராய்ச்சி.

[மதுரை, ஸம்ஸ்க்ருதகாலேஜ் ஆசிரியர்,
ஸ்ரீமாந் T. N. அப்பணையங்கார் எழுதுவது.]

[௫௯-ம் பக்கத் தொடர்ச்சி.]

[கொடை.]

உண்டாட்டயர்ந்த கொற்றவீரர் தாம் கொண்ட நிரையை இரவலர்க்கு வரையாது வழங்குதல் கொடையென்னுந் துறையாம். தாம் உண்டுமகிழ்ந்தார், பிறரும் உண்டுமகிழுமாறு அவர்க்குப் பொருட் கொடைபுரிந்தனர் என மேலையதனோடு இத்துறைக்கு இயைபு காணத் தக்கது. இதுவே இத்திணையின் இறுதியாகத் தொல்காப்பியத்துக் கூறப்பெற்றது. ஆயினும் இந்நூலாசிரியர் இதன்மேலும் சிலதுறைகள் கூறினர். இது கிடக்க.

வறியராய் ஏற்றார்க்கு மாற்றாதுகொடுத்தலே ஈகையின் இலக்கணம். ஆதலால் இக்கொடை மேலேகூறிய பாதீடென்னுந் துறையுள்

அடங்காதாயிற்று. போர்த்தொழில் புரிவதில் ஒரோருவினைக்கென்று உரிமைபூண்டவரே பாதீடு பெறுவோராக, கொடையினைப்பெறுவார் அவரையொழிந்த ஏனை இரவலாளரே என்க.

"ஈண்டியநிரை யொழிவின்றி, வேண்டியோர்க்கு விரும்பிவீசின்று" என்பது இத்துறைக்குரிய வரலாற்றுச்செய்யுளின் கொளு. இதனால் வெட்சிவீரர் மிக விருப்பத்துடன் கொடையினை மேற்கொள்வரென்பது போதரும். ஆகையால் அவர் அங்ஙனம் விரும்புதற்காரணம் இங்கு விரித்துரைக்கத்தக்கது.

கொடையாவது, ஈவோர் ஏற்போர் என்ற இருவர்க்கும் ஏககாலத்தில் இன்பந்தருவது. தாம் இன்புறும்பொருளைப் பிறர்க்குக் கொடுப்பதால் அவரும் இன்புறுவர். அவர் இன்புறக்கண்டு மீண்டும் தாம் இன்புறுதல் கூடும். ஆகலின் இவ் வீதலின்பம் ஒருதலைநுகர்ச்சியேயுள்ள ஏனை உலகவின்பம்போலாது, அவற்றின் இருமடி உயர்ந்து வேறாகச் சிறப்புறுகின்றது. இதனால் இஃது இம்மைக்கண் நுகரும் ஒரு பேரின்பமென்று பேசுந்தரத்தது. இதனையே "ஈத்துவக்கும் இன்பம்" (குறள். 228.) எனத் தெய்வப்புலவரும் திருவாய்மலர்ந்தனர். இச் சீரிய இன்பம் இங்கு வீரியராலும் விழையப்பெற்றதாம். உண்டாட்டயரும் உவகையினும் மிகுதியாக இக்கொடைக்கடனாற்றலை வெட்சியார் விரும்பி மேற்கொள்வர் என்க.

இதுவேயன்றி, கொடையுங் கொற்றமும் வீரரிடத்து இணைபிரியாமல் இயைந்து நிற்பன. பற்றலர்த்தேய்த்த கொற்றவர்க்காயினும் பெற்ற செல்வப் பெருவளமுழுவதும் உற்றவர்க்குதவலே உறுபுகழ் விளைக்கும். கொடையில்லாவழிக் கொற்றமும் இல்லையாய் முடியும். விரவலரிடத்து அரியவாகக்கொண்ட பொருள்களை இரவலரிடத்து எளியவாகக் கொடுக்குந் தன்மையால், இதுபோன்ற படைப்புப்பலபடைக்கும் ஆற்றலர் என, மறவாது தமக்கண் மலையிலக்காகும். ஆகையால் இங்கு அவ



ரது கொடையின்மிகுதி கூறியதெல்லாம், அவர் வீரத்தின்பெருமையை விளக்கியதாகவே கொள்ளப்படும். இக்காரணங்களால் இவ் வெட்சித்திணைக்கண் இத்துறை மிகமிக இன்றியமையாததென்பது தெளிவாம். இச்சிறப்புப்பற்றியே இந்நூலாசிரியரும் இத்துறையினை "உயர் கொடை" என விசேடித்தார்.

இனி, இதன் வரலாற்றுச்செய்யுளில், வெட்சிவீரர் சிலையாற்றந்த வளம், கிணையன் துடியன் விறலி பாண் வெங்கட்கு வீசும் விலையாகும் என்றதன் நயம் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இங்கு வளம் என்றது ஆநிரையாகிய செல்வத்தை. பாண் என்றது பாணனை. கிணையன் முதலியோர் இரந்துசென்மாக்களாவர். இதனுள், துறைப்பொருளாகிய கொடை குறிப்பாலன்றி வெளிப்படுவதன்று.

இங்ஙனம் செய்யுள்செய்தது, ஏற்றலும் ஈதலும் வேண்டாது எவரும் தாமே உரிமைகொள்ளவிடுத்த கொடைவீரரது வரையாத வள்ளன்மைதோற்றுதற் கென்க. 'வெங்கட்கு வீசும்விலை' என்றதனால், ஈவோர் தாம் மதுவருந்தி மனமுவந்தவாறே ஏற்போர்க்கும் அந்நுகர்ச்சி கூடுமாறு தம்மையொப்பத் தலையளிசெய்தமை குறிக்கப்பெற்றதாம். அன்றியும், 'வீசும்' என்ற சொல்லாற்றல், கொள்வது குறையும் கொடுப்பது மிகையுமாக இரவன்மாக்களும் வரைவின்றிவழங்கினர் என, அவர் பெற்ற வளத்தின்பெருமையுணர்த்திநின்றது.

இன்னும் இச்செய்யுளால், பற்றார்புலத்து ஒற்றர் உணராமற் சென்று ஊர்கொலைநிகழ்த்தி, நோயின்றுய்த்துப் பூசல்மாற்றி அரிதாகத் தந்துநிறுத்திய ஆநிரையாகிய செல்வமனைத்தையும் கள்விலையாட்டி தன் கொள்விலைப்பொருட்டால் எளிதாக எய்தவிடுத்த வெட்சிவீரரது கொடைமடம் இருந்தவாறென்னே! என அதனை வியந்துரைத்ததூஉம் ஆம். பிறவும் அன்ன.

[புலனறிசிறப்பு.]

இனி, பகைப்புலத்துச் சென்று ஒற்றாய்ந்துவந்தார்க்குச் சிறப்புச்செய்தல் புலனறிசிறப்பு எனப்படும். சிறப்புச்செய்தலென்றது

ஒழிந்தோரெல்லாரினும் அவர்க்குச் சிறப்பாகக் கொடுத்தலை. இத்துறைப்பாட்டின் கொளுவில், "சிறப்பு ஈந்தன்று" என்றது, மேற்கூறிய கொடையென்னுந் துறையோடு இஃதியையுடைத்தாதல் விளக்கி நின்றது.

இரவன்மாக்களெல்லார்க்கும் ஒருதன்மையாகக் கொடுத்தல் கொடையென்னுந் துறை. இஃது அன்னதன்றிப் புலனறிந்தோர்க்குச் சிறப்பாகக் கொடுத்தலைக் கூறுவதாம். ஆகையால் இது அதனினும் வேறாய் இங்கு ஒரு தனித்துறையாக வேண்டப்பட்டது. தொல்காப்பியம் இத்துறையினைக் கூறிற்றில்லையாயினும், முதனூலாகிய பன்னிருபடலத்து இங்ஙனம் வழக்குண்மை அறியத்தக்கது.

இரவலர்க்கு ஈகை, புலனறிசிறப்பு என்னும் இரண்டும் கொடுத்தலேயாகையால், அப்பொருளொற்றுமைபற்றி, ஆசிரியர் தொல்காப்பியர் இவ்வாறு வேறுபிரித்தலை வேண்டினாரல்லர். ஆகையால் அவர்க்கு இரண்டுதுறைகளும் கொடை என ஒன்றா யடங்குமென்க. 'பிள்ளைவழக்கு' என இனி வருகின்ற துறைக்கும் இஃதொக்கும்.

"இளமாவெயிற்றியிவைகாணின்னையர்
தலைகாளைவேட்டத்துத்தந்தநிரைகள்
கொல்லன் றுடியன்கொளைபுணர்சீர்வல்ல
நல்லியாழ்ப்பாணர்தம்முன்றினிறைந்தன.

முருந்தேரிளநகைகாணாய்நின்னையர்
கரந்தையலறக்கவர்ந்தநிரைகள்
கள்விலையாட்டிநல்வேய்தெரிகானவன்
புள்வாய்ப்புச்சொன்னகணிமுன்றினிறைந்தன.

கயமலருண்கண்ணாய்காணாய்நின்னையர்
அயலூரலறவெறிந்தநல்லானிரைகள்
நயனின்மொழியினரைமுதுபாடி
யெயினரெயிற்றியர்முன்றினிறைந்தன."



என்பது சிலப்பதிகார வேட்டுவவரி. "இவைமூன்றுங் கொடையென்னுந் துறை" என்றார் அடியார்க்குநல்லார். இங்கு வேய்தெரிகானவன், புள்வாய்ப்புச் சொன்ன கணி என்னுமிவர்க்குக் கொடுத்தமையும் ஒருங்கு கூறப்பட்டது. ஆகையால் இவ்விலக்கியம் தொல்காப்பியத்தையே இலக்கணமாகக்கொண்டதாம்.

வெண்பாமாலையுடையார்கொள்கைக்கேற்ப வேய்தெரிகானவற்குக் கொடுத்தல் புலனறிசிறப்பெனவும், புள்வாய்ப்புச்சொன்னோர்க்குக் கொடுத்தல் பிள்ளைவழக்கென்றும் தனித்தனி வழங்கற்குரியன. ஆசிரியர் தொல்காப்பியர் ஒற்றுமைநயத்தால் ஒன்றென வுரைக்க, ஐயனாரிதனார் இவற்றை வேற்றுமைநயத்தால் வேறென மொழிந்தனர். உரையாசிரிய ரிளம்பூரணர் "பிள்ளைவழக்கு, புலனறிசிறப்பு என்பன அத்துணைச் சிறப்பில" என்றாராயினும், பொதுவாக இரவலர்க்கீதலைக் காட்டில் இவர்கட் கீதல் மிக்க சிறப்புடைத்தென்பது வெளிப்படை. இங்ஙனம் இருவேறுகொள்கையும் ஒன்றற்கொன்று முரணாவாகலின், இஃதொரு மாறுபாடில்லா வேறுபாடென்க.

இன்னும் புலனறிந்தோர்க்குச் சிறப்புச்செய்தல் தனித்துறையாகவும் விரிக்கத்தகுமென்பது தொல்காப்பியர்க்கும் உடன்பாடாகும் "ஒற்றினாகிய வேயே வேய்ப்புறம், முற்றினாகிய புறத்திறை" (புறத்திணை. 3.) என அவர் கூறியது இதற்குத் தலைக்கு. இதனுள் "வேய்ப்புறம் முற்றின" என்புழி "வேயுரைத்தோரிடத்துச் செய்யுஞ் சிறப்புக்கள் முடிந்தபின்னர்" என்று நச்சினார்க்கினியர் நயம்பட வுரைத்தார். அன்றியும், அவர்,

"மாற்றருந்தப்பின்வயவேந்தனல்லனேல்
ஏற்றபெருஞ்சிறப்பென்றீதும்—வேற்றூரிற்
புல்வேய் தரம்பைப்புறஞ்சிறைவாய்நின்றொற்றி
நல்வேயுரைத்தார்க்குநாம்.

என இதற்கு உதாரணமுங் காட்டிச்சென்றனர். ஆகையால் இப் புலனறிசிறப்பே வேய்ப்புறம் என்ற வேறொருபெயரால் தொல்காப்பித்து

வழங்கப்பட்டதென்னலாம். ஆயினும் இக்கருத்தறியாத இளம்பூரணர் இதற்கு வேறுபொருளெழுதினர். அது கிடக்க.

இப்புலனறிசிறப்பு வேய்க்குப் பின்னும் புறத்திறைக்கு முன்னுமே அமைவுடையதாக, இவ்வெண்பாமாலை அதனைக் கொடைப்பின் கூறியதென்னையோ என்னில்: வேயுரைத்தார்க்கு வெட்சிவீரர் அவ்வுரைத்த ஞான்றே சிறப்புச்செய்தலும் உண்டு; அன்றித் தாம் வென்று மீண்ட பின்றை யாவர்க்கும் மனமுவந்தளிக்குங்கால் அவர்க்குச் சிறப்பாகக் கொடுத்தலும் உண்டு; ஆகலின் அவற்றுட் பிந்தியமுறையால் ஈண்டைக் கமைத்தது குற்றமாகாதென்க.

இனிப் பாதீடென்னுந் துறையில் பகுத்திடுதல் பெறுதற்குரியார் புலனறிந்தோரும் புள்ளுரைத்தோருமெனச் சொல்லப்பெற்றமையால், மீண்டும் அவர்க்குக் கொடுத்தலையே ஈண்டுக்கூறியது குற்றமாமென்னில்; அற்றன்று. ஆக்கொள்ளு முயற்சியிற் செய்தார் செய்த வினை வகையறிந்து அவற்றினளவிற் கேற்பப் பகுத்துக் கொடுத்தலே பாதீடென்னுந் துறையா யமைய, புலனறிசிறப்பு அவ்வாறன்றி வெட்சிவீரர் பெருவகையோடு வரைவின்றிவழங்கிய சிறப்பினைக் கூறுவதாம். இவ்வேறுபாடு நன்குவிளங்கவே, "தம்மினும் மிகச் சிறப்பீந்தன்று" எனவும், "செருமுனையிற் சென்றறிந்துவந்தார் பெறுமுறையின், ஒன்றிரண்டிட்டுக் கொடுத்தல்" எனவுங் கூறியதெனவுணர்க. ஆகலின் மிகையென்னுங் குற்றமும் ஈண்டுச் செல்லாதாயிற்று.

[பிள்ளைவழக்கு].

இனிப் பிள்ளைவழக்கென்பது புள்ளுரைத்தார்க்கு வழங்குதலைக் கூறுவதாம் பிள்ளை—கரிக்குருவி. அஃது இங்கு அதனாலறியும் நிமித்தத்தை யுணர்த்தும் பொதுச்சொல்லாய்நின்றது. கரந்தைத் திணைக்கண் 'பிள்ளைப்பெயர்ச்சி' என்னுந் துறையினும் இஃது இப் பொருள்பற்றி ஆளப்பெற்றது. பிள்ளையின்பொருட்டு வழங்கும் வழக்கு, பிள்ளைவழக்கு எனக் கொள்க. இதுவே, தப்பாமல் நிமித்தஞ்



சொன்னார்க்குப் பெறும் முறைமையைச் சொல்லியது என விரித்துரைக் கப்படுவது. பிள்ளையென்னுஞ் சொற்குக் கரிக்குருவி யென்னும் பொருளில் வழக்குண்மை, "பிள்ளையுள்புகுந்தழித்ததாதலால், எள்ளன் மின்கிளை" (கோவிந்தை. ௧௨) என்னுஞ் சிந்தாமணியானும் அதனுரையானும் அறியலாம்.

புலனறிந்தோர்க்குக் கொடுப்பது புலனறிசிறப்பு எனத் தனித் துறையாயினாற்போலப் புள்ளுரைத்தோர்க்குக் கொடுத்தலும் ஒரு தனித்துறையாக அதன்பின்னர் அமைவதாயிற்று. இதனையும் கொடையென்னுந் துறையுள் அடங்குவதாகக்கொண்டு, வேறாக வேண்டிற் றிலர் ஆசிரியர் தொல்காப்பியர். ஆயினும் பன்னிருபடலத்தை அடி யொற்றி ஐயனாரிதனார் தழுவிக்கொண்டமையின் இதுவும் மிகை யாகாதென்க.

அங்ஙனமாயின், 'பாதீடு' என்னுந் துறையினும் புள்ளுரைத் தோர்க்கீதல் சொல்லப்படுவதால் அதனோடு இதனிடை வேற்றுமை யாதோ எனின்: அது, போரின்கண் வினைபுரிந்தார் எல்லார்க்கு மொக்க அளவறிந்து பகுத்திடுவது. இஃது அன்னதன்றிப் புள்ளுரைத் தோர்க்கே சிறப்பாக வரையாது வழங்குவதாம். ஆகலினானே இது கொடையின்பகுதியாய் அடங்குவதாயிற்று. இதுபற்றியே சிலப்பதி காரமும், "புள்வாய்ப்புச் சொன்ன கணிமுன்றி னிறைந்தன" என இதனைக் கொடையென்னுந் துறைப்பொருள்தோன்றக் கூறியதெனக் கொள்க.

இரவலர்க்கீதலே கொடையாவதல்லது, வினையாளர்க்குப் பயன் நோக்கியீதல் கொடையாகுமா றென்னை யெனில், புள்ளுரைப்போரும், புலனறிவோரும், கொல்லரும், துடியரும், பாணரும் என்றித்திறத்தா ரெல்லாம் ஓரொருவினைக் குரிமையுடையராயினும் இத்துறைக்கேற்ப, இரவலரோடு ஒருதன்மையராகவே கருதப்பெறுவர். இங்கு அவர்க் கீந்ததும் பயன்நோக்கி ஈந்ததாகாது. என்னை? அவரவர் தம்வினைக்குத்

தகப் பாதீடாகப் பெற்றதுகொண்டு சுற்றமருத்தி ஓம்பாதுண்டு கூம்பாது வீசி எஞ்ஞான்றும் வறியராய் இரந்துண்வாழ்க்கையையே விரும்பி மேற்கொள்பவராகலின், அப்பண்புபற்றி அவர்க்கிந்தது கொடையே யாவதன்றிப் பிறிதன்றென்பது.

அற்றேல், இதன் வரலாற்றுச்செய்யுளில், "புண்ணலம் பல்லாறியப் பகர்ந்தார்க்கு......கொடு" எனக் காரண காரியப் பொருள் தோன்றக் கூறிய தென்னையெனின்; அற்றன்று. "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையா"க்கொள்ளும் இயல்பினால் அவரது செய்ந்நன்றி நினைத்ததல்லது, கொடைக்கு அதனைக் காரணமாகக் காட்டியதன்று என்க. அல்லதூஉம், 'பிள்ளைவழக்கு' என்னும் இத்துறைப்பொருள் விளக்குதற்கு அங்ஙனங் கூறினாரென்றலும் ஆம்.

அற்றேல் அஃதாக. புலனறிசிறப்பு, பிள்ளைவழக்கு என்பன முறையே புலனறிந்தோர்க்கும் புள்ளுரைத்தோர்க்கும் சிறப்பாகக் கொடுத்தல் என்னும் பொருள்முடிபால் ஒற்றுமையுடையவாகையால் இரண்டையும் ஒரே துறையாக்க அமையும்; வேறுவேறு கூறவேண்டாவென்னில்: அஃதொக்கும். ஆயினும், புலனறிதலையேனும் புள்ளுரைத்தலையேனும் தனித்தனி விசேடிக்குங்கால் அவ்வவற்றிற் கேற்ற அடைதொடை புணர்த்து விரியக்கூறவேண்டுதலின், அவற்றிற் றோன்றும் சுவைநயம் மிகமிக வேறுபடுவதாகும். அதுகருதி அவற்றை இரண்டாக வகுத்தது குற்றமாகாதென்க.

இனி, வெட்சிவீரர் ஆகோள்கருதிப் பகைமேற்செல்வுழி, புள்ளுரைத்தல் முன்னும் புலனறிதல் பின்னுமே நிகழ்வனவாகலின் அவற்றை இங்கு முறைபிறழவைத்தது என்னையோ வென்னில், புள் நிமித்தங் கூறுதலினும் புலனறிந்துசொல்லுதல் சிறப்புடைத்தாகலின் அதுபற்றி அவர்க்குக் கொடைக்கடனாற்றியவழி நிகழ்ச்சிமுறையே முறையாகக் கோடலிற் பிறழ்ச்சியின்றென்பது. இது நிற்க.

[தொடரும்]

---



# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கஉகூ-ம் பக்கத்தொடர்ச்சி].

பகையல்லாதவனை மறைந்துநின்று கொன்ற நீ
வீரரேறுபோல வெட்கமின்றி நிற்கின்றாயே! எனல்.

470 "மற்றொருத்தன் வலிந்தறை கூவ வந்
துற்ற என்னை ஒளித்துயி ருண்டநீ
இற்றை யிற்பிறர்க் கும்இகல் ஏறெனா
நிற்றி போலும் கிடந்த நிலத்தரோ!"

இ-ள். "சுக்கிரீவன் வலியப் போர்செய்தற் கழைத்ததனால் வந்து சேர்ந்த என்னை (வஞ்சமாக) மறைந்து (நின்று அம்புவிட்டுக்) கொன்ற நீ (இந்த அதம அதர்மகாரியத்தைச் செய்த) இன்றைத்தினத்திலேயே (உன் அநியாயச்செயலாற் கொல்லுண்டு யான்) கிடக்கின்ற (இந்த) இடத்திலேயே பிற (வீர) ரெல்லாருக்கும் வலிய ஆண்சிங்கம்போல வெட்கமின்றி (இறுமாந்து) நிற்கின்றாயே!"

அறைகூவல் - போர்செய்தற் கழைத்தல். இற்றை - இன்றைத் தினம். இகல் - வலி. ஏறு, சிங்கம் முதலிய மிருகங்களின் ஆண்; இங்கே அவற்றுட் சிறந்த ஆண்சிங்கத்தைக் குறித்தது. நிற்றி - நிற்கின்றாய். போலும் ஒப்பில் போலி. அரோ - ஈற்றசை.

வாலியை அழித்தாயல்லை,
தருமவேலியை அழித்தா யெனல்.

471 "நூலி யற்கையும் நும்குலத் துந்தையர்
போலி யற்கையும் சீலமும் போற்றலை,
வாலி யைப்படுத் தாயலை, மன்அற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே."

இ - ள். "(மறைந்து நின்று என்னைக்கொன்றதனால் தரும சாஸ்திர முறையையும் உங்கள் குலத்து முன்னோர் (அநுசரித்த) முறையையும் (அவர்கள்) நல்லொழுக்கத்தையும் பாதுகாத்தவனல்லாதவனாயினாய். வாலியைத்தொலைத்தாயல்லை! தருமவேலியைத் தொலைத்தாய்!"

இயற்கை—முறைமை. நும்—உங்களுடைய. உந்தை—உன் தந்தை. உந்தையர்—உங்கள் முன்னோர். இராமனையும் அவன் தம்பியையும் உளப்படுத்தி நும் குலத்து உந்தையரென்றான். 'வாலியை' யென்றது 'என்னை' யென்றபடி. வாலி தன்மைப்படர்க்கை. இவ்வாறு தன்னைப் பிறன்போலக் கூறியதனால் ஒருவகை நயம் அமைதல் கவனிக்கத்தக்கது. விறல்—வெற்றி; வலி.

உன் செயல், தோற்றத்திற் குரங்கினைக் கொன்றதாய், உண்மையில், அறந்தனை அழித்ததாயுள்ளது என்பது குறிப்பு.

உண்மையாக வாலியைக் கொன்றிருக்கவும், வாலியைக் கொன்றாயல்லையென முரண்படக்கூறி, அதிசய முண்டாக்கிப் பின்பு, அக்கொலை சிறிது, அதனால் விளையும் பயன் பெரிது, அப்பயன் இன்றளவும் அழியாது நிலையாயிருந்த தருமவேலியை அழித்ததாயுள்ளதென்று கூறிய சாதுரியம் பாராட்டற்பாலது. அரசன் அக்கிரமஞ்செய்தால், அவனைப் பிறர் பலர் பின்பற்றுவர்: அதனால் தருமம் அழிந்துவிடுமென்பது கருத்து.

பயிர் குடியாக, ராஜநீதி வேலியாக, பயிரைக்காக்கும் காவற்காரன் குடியைக்காக்கும் அரசனாக,—வேலி அழிக்கப்பட்டால் மிருகங்கள் மேய்தலுக் குள்ளாகிப் பயிர் அழிந்துவிடல்போல, நீதி அழிக்கப்பட்டால் தீயோர்கொடுமைக்குள்ளாகிக் குடி அழிந்துவிடுமென்றும், காவற்காரனே வேலியை அழித்தாற்போல அரசனே நீதியை அழித்தால், அது போன்ற விபரீதவினை வேறு யாதுளது! என்றும் விரித்துக் கூறுதற்குரிய கருத்தைச் சுருக்கமான சொற்களால் எளிது விளங்க இனிது கூறியிருக்கும் நயம் கூர்ந்து நோக்குதற்குரியது.



மனைவியைக் காவாத வில்லைவைத்திருந்தது, ஆயுதமில்லாதவன்மார்பில் அம்புவிடவோ? என்றிகழ்தல்.

472 "தாரம் மற்றொருவன்கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை வீரம் பரிப்பதென்!
நேரும் அன்று மறைந்து நிராயுதன்
மார்பின் எய்யவோ, வில் இகல் வல்லதே!"

இ - ள். "(நீ கொண்ட) மனையாளை மற்றொருவன் (கவர்ந்து) கொள்ள (வொட்டாமல் தடுத்து அவனைக்கொன்று அவளைக் காக்கப் பயன்படாமல் வீண்) பாரமும் கொடுமையுமாயுள்ள வில்லை வீரத் (தோற்றத்) தோடு தாங்கியிருப்பது எதற்காகவோ? (உனக்கு ஒரு தீங்கும் செய்யாதிருப்பதேயன்றி) ஓராயுதமுமில்லாதிருப்பவன் மார்பிலே (வீரர்போல நேரில் நின்று எய்தலே நீதியற்றதாயிருக்க) நேராக அல்லாமல், (பேடிகள்போல வஞ்சகமாக,) மறைவாக (நின்று) எய்தற்கோ (நீ) விற்போர்வன்மையுடைத்தாயிருப்பது!"

தாரம் - மனைவி. பரித்தல் - தாங்குதல். இகல் - போர். தாரம் சிலை இரண்டாம்வேற்றுமைத்தொகை. வீரம் மூன்றாம்வேற்றுமைத் தொகை. 'வீரம் பழிப்பதே' என்பதும் பாடம்.

வாலி இராமனை நோக்கி, "பாரியைப்பறிகொடாது பாதுகாத்தற்குப் பயன்படுத்தப்படாத பாரவில்லை, வீரர்போல, ஏன் இறுமாப்போடு ஏந்தியிருக்கிறாயென்றெண்ணினேன்; எண்ணித் தெளிந்தது யாதெனில், அவ் வில்லைத் தொழிற்படுத்தாது சும்மாவைத்திருந்தலாகாதென்று நிராயுதனை மறைந்து கொல்லுதற்குபயோகித்துச் செய்யக்கடவதைச் செய்யாதுவிட்டதேயன்றிச் செய்யாதொழியக்கடவதைச்செய்து விதிவிலக் கிரண்டையுமே மீறினாயென்பது" என்றானென்க.

இராமன் தன்னை மறைந்தெய்ததற்காக, வாலி மனமெரிந்து வருந்திக் கூறிய 'நினைத்தனைபோலும் செய்கை' யென்றற்றொடக்கத்த

வச்சப்பேச்சின் இறுதியாக அதன் மகுடமென்னும்படி இப்போது கூறியதினும் அதிகபலமாக ரோசமுண்டாகும்படி இழித்து எள்ளனஞ் செய்தல் இயலாததாயிருத்தல் நோக்கத்தக்கது.

### வாலிக்கு ராமன் மறுமொழி பகருதல்.

[“உன் குலப்பகைஞனை மாயாவியைக்கொல்லப் பாதாளத்துள்ளே போன நீ, நெடுங்காலம் திரும்பாமையால், இறந்தாயென்று உன்குலப் பெரியோர் உன் தம்பியை ‘அரசாள்க’ என, இசையானாய், ‘மன்னனை மாய்த்தவனை மாய்ப்பேன், மாய்க்கொணாதெனில் மாள்வேனேயன்றி ஆளேன்’ என, அப்பெரியோர் அரசை வற்புறுத்திக் கொடுத்ததுண்டு, அவன் (மனமொடு) கொண்டதில்லை. நீ திரும்பிவந்தபோது, விரும்பி வரவேற்று, வணங்கி ‘உன் அரசை ஒப்புக்கொள்’ என்றனன். அவன் தம்பியென்ற அன்பு சற்றும் இல்லாயாய் அவன் குற்றமற்றவனென்றறிந்தும், கொல்லப்புகுந்தாய். அஞ்சி அபயமென்றும் அருளினையில்லை. தோற்றனனென்று தொழுதும் கூற்றுவன்போலக் கொல்வது குறித்தாய். உயிர்தப்ப ஓடியவனை உய்யவிடாது தொடர்ந்தாய். இப்போது அவன் உயிரோடிருப்பது, ‘இந்த மலைக்கு வாலி வந்தால் இறந்திடுக’ என மதங்கமுனி சபித்த சாபத்தடையுடைய மலையை அடைந்திருப்பதனாலன்றி நீ மனமாரக் கொல்லாமல் விட்டிருத்தலாலன்று.”]

### ஏதிலானில்லாளைக் கவர்வானுக்கு எவ்வகைப்பெருமையும் இல்லையெனல்:

473 “ஈர மாவதும் இற்பிறப் பாவதும்
வீர மாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும் மற்றொரு வன்புணர்
தார மாவதைத் தாங்கும் தருக்கதோ?”

இ - ள். “(கொல்ல முடியாத தம்பியைக் கொல்லாதிருந்தாயேயன்றிக் கவரக்கூடிய அவன் மனைவியைக் கவராது விட்டாயில்லை.) அன்பும் குடிப்பிறப்பும் கல்வியின் (பயனான) உண்மையொழுக்கத்துக்கு



உரிமையும் (உடையேமென்று களிப்புற்றிருந்தாய்; இவைகளை உடைமை) மற்றொருவன் மணஞ்செய்த மனைவியைப் பிடித்துக்கொள்ளும் அகங்கார (ச்செயலோடு பொருந்து)மோ?”

ஈரம் - அன்பு. இற்பிறப்பு - உயர்குடிப்பிறப்பு. வாரம் - உரிமை. கல்யாணஞ்செய்தலென்னும் பொருளுடைய மணம்புணர்தல், புணர்தலெனச் சுருக்கிக் கூறப்பட்டது. தாங்குதல் - பிடித்துக்கொள்ளுதல் (தமிழகராதி). தருக்கு - அகங்காரம். அது பகுதிப்பொருள்விகுதி. ‘தருக்கரோ’ என்பதும் பாடம். ‘தருக்கதோ’ என்ற பாடம் திரிசிரபுரம் வி. கோவிந்தபிள்ளை பதிப்பிற் கண்டது.

‘தாங்கும் தருக்கரோ’ என்பதற்கு, ‘பாதுகாக்கும் பெருமையேயன்றோ’ என்பது முந்திய உரை.

### போர்வீரர்தருமத்துக்கும் இல்வாழ்வார்தருமத்துக்கும் பொருந்தாதசெயல்கள் செய்தாயாதலால் உன்னைக் கொன்றேனெனல்.

[“நாம் வலியேமென்று மெலியாரை வெகுண்டு வேதனைப்படுத்தலால் வீரதருமம் கெட்டுவிடும். பூவையர்கற்பழித்தலாற் பொதுத்தருமமே கெட்டுவிடும். நீ சுக்கிரீவனைத் துன்புறுத்தியும் அவன்மனைவியை வௌவியும் இருதருமங்களையும் ஒருசேரக் கெடுத்தாயாதலாலும் எனக்கு இன்னுயிர்நண்பனான உன்னுடைய தம்பியைக் காத்தல் என்னுடைய கடனாதலாலும் உன்னைக் கொன்றேன்” என்றான் இராமன்.]

### இராமனுக்கு வாலி எதிர்மொழி இயம்பல்.

### எங்களுக்கேற்பட்டது விவாகச்சேர்க்கையன்று. இயற்கைச்சேர்க்கையே யெனல்.

474 “ஐய, நுங்கள் அருங்குலக் கற்பின்அப்
பொய்யில் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லெங்களைத் தேமலர் மேலவன்
எய்தின் எய்திய தாக இயற்றினான்.”

இ-ள். "(மனித இனத்தினரான) உங்களுடைய குல (த்துத் தோன்றும்) மாதருக்குப் பொருத்தமான (விவாகஞ்செய்தே ஆடவரைச்) சேர்தல் (என்ற ஏற்பாட்டைப் பிரமதேவன் செய்திருப்பது) போல, (மிருக இனத்தைச் சேர்ந்த வானரரான) எங் (கள் மாதர்) களுக்கு (ஒரு ஏற்பாடும் அந்தப்) பிரமதேவன் செய்யவில்லை. (எங்களுள் எவனேனும் எவளையேனும்) அடை (யும்படி நேர்) ந்தால், (அவ்வடைதல் கல்யாணச் சடங்கில்லாமல் அவன் அவளைக் கலத்தலுக்கு) அடைந்ததாகுமாறு செய்திருக்கிறான்."

ஐய—ஐயனே—தலைவனே. அண்மைவிளி. நுங்கள்—உங்கள். கற்பின்—கற்பினையுடைய. அ பலாறிசுட்டு. பொய்இல்—பொய்ம்மையில்லாத. "பொய்யின்மை—மனம்வேறு சொல்வேறு தொழில்வேறாகாமை, திரிகரணசுத்தி." புணர்ச்சி—(விவாகஞ்செய்து) கலத்தல் (ஆகிய விவாகப்புணர்ச்சி). எமை—எங்களுக்கு; உருபுமயக்கம். தேம் மலர் மேலவன்—வாசனையுடைய (தாமரை) மலர்மேலிருப்பவன்—பிரமன். எய்தல்—அடைதல்.

ஆண் பெண் நெருங்கநேர்ந்தால் பொருந்தநேர்ந்ததாக யாங்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பது கருத்து.

["ஆதலால் என்செயல் இயற்கையானதேயன்றிக் குற்றமாகாதென்று கொள்வாயாக" என்றான் வாலி.]

வாலி கூறிய சமாதானம் போலியாமென
இராமன் ஏதுக்காட்டி விளக்குதல்.

["நீ, உன்தம்பி, அநுமன் முதலியோர், வடிவத்தால் வானரராயினும், தேவர்களது புதல்வராயிருத்தலாலும் அறநெறியை ஐயந்திரிபற அறிந்திருத்தலாலும் மிருகங்களாகீர்; ஆதலால் மிருகச்செயல் உனக்கு அடாததே".]



மிருக உடம்புடையாயாயினும் மனிதஅறிவுடையாயாதலால்
நீ செய்த தவறு தவறேயெனல்.

475 "பொறியின் யாக்கைய தோ? புலன் நோக்கிய
அறிவின் மேலதன் றோ? அறத் தாறுதான்:
நெறியும் நீர்மையும் நேரி துணர்ந்த நீ
பெறுதி யோ? பிழை உற்றுழி பெற்றிதான்."

இ-ள். "அறநெறியானது, (மக்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவான) ஐம்பொறிகளையுடைய உடம்பைச் சார்ந்ததோ? (அவைம்பொறி வாயிலாக அடையும்) புலன்களை (ஏற்று ஆராய்ந்து பகுத்து) அறிகின்ற (மக்களுக்கே உரித்தான) அறிவைச் சார்ந்ததன்றோ? (மக்கள்போல அவ் அற) நெறியையும் (அறநெறிப்படி ஒழுகுவார் நற்பயனையும் ஒழுகாதார் தீப்பயனையும் அடையச்செய்தலாகிய அவ் அறநெறியினது) இயல்பையும் செவ்விதாகத் தெரிந்த நீ (மிருகங்களுக் கியல்பான, ஆண் பெண் முறைதவறிச் சேர்தல் போன்ற) பிழையை உற்று (அப்பிழையால் அம்மிருகங்கள் குற்றத்துக்குள்ளாகாமல்) உறும் தன்மையைப் பெறுதற்குரியையல்லையோ?"

பொறி புலன்கள் முறையே வடமொழியில் இந்திரியங்கள் விஷயங்கள் எனப்படும். மேல்-இடம். மேலது-இடத்தினது. அறத்து ஆறு அறநெறி - தருமமார்க்கம் - நல்லொழுக்கம். மூன்றாவதடியில்வரு நெறி அறநெறியைக்குறித்தது. நீர்மை—இயல்பு—தன்மை. நேர்மை செவ்வை—நுண்மை. நேரிது (ஆக) செவ்வையாக; நுண்ணிதாக. பெறுதி—பெறுவாய். 'புலனுகிய', 'புலனுக்கிய', 'நெறியினோண்மை நேரின்றுணர்ந்த நீ' என்பனவும் பாடங்கள்.

"நீ, வடிவினால் விலங்காகிய வானரம்போலிருப்பினும், பகுத்தறிவுடைமையால் மனிதர்போலுதலால், தருமமார்க்கத்தை யறிந்திருந்தே தவறுகள்செய்தது தகாது என்பதாம். தொல்காப்பியத்து மரபியலில் 'மக்கள் தாமே ஆறறிவுயிரே — பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே

என்ற சூத்திரத்தின் உரையில் 'பிறப்பென்றதனால், குரக்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையனவெனப்படும் மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்கு மென்பது' என்பது இங்குக் காணத்தக்கது."

முதலைபிடிக்க, மூலமே! என்று முறையிட்டு முத்திபெற்ற யானை (யைத் தெய்வமென்னுமல்) மிருகமெனலாமோ வெனல்.

476 "மாடு பற்றி இடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற உணர்வின் பயத்தினால்
வீடு பெற்ற விலங்கும் விலங்கதோ?"

இ - ள். "(தனது தேகத்தில் ஒரு) பக்கத்தை (க்கௌவி) ப் பிடித்து முதலையிழுத்ததனால் (பாஞ்சசன்னிய மென்னும்) சங்கை (இடக்கையினிடத்து) ப் பிடித்த திருமாலை (ஆதிமூலமே! என்று கூவி யழைத்து) ஓலமிட்ட ஒப்பற்ற பெருமைபெற்ற அறிவின் பல (ன் படைத்தமையி)னால் (தன்னைப் பிடித்த முதலைவாயினின்றும்) விடுதலை பெற்ற (கஜேந்திராழ்வா னென்னும் யானையாகிய) மிருகமும் மிருக (மென்று சொல்லப்படு) மோ?"

மாடு – பக்கம். இடங்கர் – முதலை. வலித்தல் – இழுத்தல். கோடு – சங்கு. கொற்றம் – வெற்றி. கொற்றவன் – வெற்றியுடையவன். கூய – கூவிய – ஓலமிட்ட (கந்தபு. மாகாளர். சு. தமிழ்ச்சொல் லகராதி). ஓர் – ஒப்பற்ற. பாடு – பெருமை. பயம் – பயன் – பலம் – பலன். வீடு – விடுதலை; முத்தி. விலங்கு – மிருகம். அது பகுதிப்பொருள்விகுதி. 'விலங்கரோ' என்பதும் பாடம்.

முதலைவாய்ப்பிடியினின்றும் பிறவிக்கட்டினின்றும் ஒருங்கே விடுதலைபெற்ற என்ற இருபொருள்பட 'வீடுபெற்ற' என இரட்டுறமொழிந்த நயம் நோக்கத்தக்கது.

கஜேந்திராழ்வான்போல நீ உருவத்தால் மிருகமானாலும், உணர்வால் மனுடனாதலால், மிருகச்செயல் (தம்பிமனைவியைச்சேர்தல்) செய்தது தவறென்பது குறிப்பு.



தீமை நன்மை தெரியாமை மிருக இயல்:
நீ அறியாத நீதி யாதுமில்லை யென்பதை
உன் பேச்சு உருபித்த தெனல்.

477 "நன்று தீதென் றியல்தெரி நன்னெறி
இன்றி வாழ்வதன் றோ விலங் கின்இயல்?
நின்ற நன்னெறி நீ அறி யாநெறி
ஒன்றும் இன்மைஉன் வாய்மை உணர்த்துமால்".

இ - ள். "மிருகசுபாவமென்பது, (இச்செயல்) நல்லது (இச் செயல்) தீயதென்று பகுத்தறிகின்ற அறிவில்லாமல் உயிர்வாழ்வதன்றோ? (அதற்கு மாறாக, உலகத்தில் வழங்கா) நின்ற நன்னெறிகளுள்ளே நீ அறியாதது ஒன்றும் இல்லாமையை (நீ இப்போது விவகாரமாகக்கூறிய) உன் வாய்ச்சொற்களே தெரிவித்துவிட்டன. (எல்லா நன்னெறிகளையுந் தெரிந்துவைத்தும் அவைகளுக்கு மாறாக நீ நடந்தது தவறேயென்பது குறிப்பு.")

இயல் – தன்மை – சுபாவம். விலங்கு – மிருகம். வாய்மை – வாக்கு – (திருவிளை. வெள்ளையானை. 2. தமிழ்ச்சொல்லகராதி) – வாய்மொழி.. ஆல் ஈற்றசை. விலங்கின்னியல் என்பதில் னகர ஒற்று விரித்தல். 'விலங்கின்னிடை' என்பதும் பாடம். இதற்கு 'மிருகங்கட்கு (மனிதரோடு) வேறுபாடு' என்பது முந்திய உரை.

விதி விலக் கறியாத மனிதர் மிருகங்களே;
விதிப்படி ஒழுகும் மிருகங்கள் தெய்வங்களே யெனல்.

478 "தக்க இன்ன, தகாதன இன்னவென்
றொக்க உன்னல ராயின், உயர்ந்துள
மக்க ளும்விலங் கே, மனு வின்நெறி
புக்க வேல், அவ் விலங்கும்புத் தேளிரே."

இ-ள். மனிதர்களும், இன்னவை தகுதியானவை, இன்னவை தகாதவை யென்று பகுத்தறியாரானால், மிருகம் (களுக் கொப்பானவர்)

களை. மிருகங்களும், சன்மார்க்கத்திற் பிரவேசித்தவைகளானால், தெய்வங் (களுக்கொப்பானவை) களே.

தக்க, புக்க — அன்சாரியை பெறாத தக்கன புக்கன; இறந்தகால வினையாலணையும்பெயர்கள். இன்ன — இவை. ஒக்க — பொருந்த. உன்னல் — நினைதல். விலங்கு — மிருகம். புத்தேள் — தெய்வம். 'உன்னலாகி' யும் பாடம்.

விலங்கும் மனிதரே என்பது இயல்பான முடிவு. அதுவே உயர்வுகுறித்தற்குப் போதியதாயிருக்கவும், 'விலங்கும் மனிதரே' என்னாது 'விலங்கும் புத்தேளிரே' என நனி உயர்த்திக்கூறி நன்னெறிச் சிறப்பை நயம்பட வற்புறுத்திய கவிசாதுரியம் பாராட்டற்பாலது.

“மநு வடசொல்; இது இங்கே அவனாற் செய்யப்பட்ட தரும சாஸ்திரத்தைக் குறித்தலால், கருத்தாவாகுபெயர். மனுவின்னெறி னகரமெய் விரித்தல். ஏல் — எனில்; மரூஉ. புத்தேளிர் இர் பலர்பால்விகுதி; கேளிர், மகளிர் என்ற இடங்களிற் போல.”

புண்ணியஞ்செய்து, புண்ணியபலனையடைந்ததுபோலப்
பாவஞ்செய்து, பாவபலனையடைந்தா யெனல்.

[“நன்னெறியில் நின்று சிவபூசை செய்த புண்ணியபலனாக நாற்பெரும் பூதங்களின் வலிமையையும் ஒருசேர நண்ணினாய் தீநெறியிற் புகுந்து தம்பியைக் கொல்ல முயன்று அவன்மனைவியைக் கவர்ந்து இல்லறமாண்பைக் கெடுத்த பாவபலனாக என் அம்புக் கிரையானாய்” என்றான் இராமன்.]

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

# பெரியநாட்டுமடம் சாசனம்.

தொண்டைமண்டலம் முற்காலத்தில் இருபத்துநான்கு கோட்டங்களாகவும் எழுபத்தொன்பது நாடுகளாகவும் பிரிக்கப்பட்டுளது என்பது சரித்திர ஆராய்ச்சியுடையார் யாவரும் அறிந்த விஷயம். காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளையவர்கள் தம்முடைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்குமுந்திய தமிழர் என்ற நூலிலே தொண்டைமண்டலத்தைப் பற்றிக் கூறும்போது அது இருபத்துநான்கு கோட்டங்களையுடையதாயினும், தொண்டைமண்டலப் பட்டயம் என்பதில் எழுபத்தேழு நாடுகளே காணப்படுகின்றன[1] வெனக் குறித்துள்ளார்கள். அவர்கள் குறித்த தொண்டைமண்டலப் பட்டையம் இதுவென இதுபொழுது அறிதற்கில்லை. எனினும் திருவண்ணாமலையிலே பெரியநாட்டுமடம் என்று ஒரு மடம் இருக்கிறது. அதற்கேற்பட்ட தாமிரப்பட்டயத்திலே இந்நாடுகளும் கோட்டங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அப்பட்டயத்தில் எழுபத்தொன்பது நாட்டிற்குப் பதிலாக எண்பத்தைந்து நாடுகள் காணப்படுகின்றன. இப்பட்டயம் வெட்டப்பட்ட காலம் சகம் ௲௪௱௩௰௫-க்கு ஆங்கிலவாண்டு 1513 ஆகும். பட்டயத்தைக் கீழே குறிக்கின்றேன்.

பெரியநாட்டுக்கு விநாயகர் அழியாவிரதம்பூண்ட விநாயகர், அப்ப[2] தம்பிரான், அழியாவிரதம்கொண்ட தம்பிரான் இவர்கள் மூணுபேருடைய திருவுளம் உண்டாவதாகவும்,

ஸ்வஸ்திஸ்ரீமன் பிருதிவிராச்சியம் கலியுகம் ஆதிப்பிரவேச தாம்பிர சாசனம். சங்கிதம் மனுவிக்கியான சமான சமன்விதம். ஆசந்திரார்க்க மகோரவாக்யம் பஞ்ச; சதுர்விம்சதி கோஷ்டம் யேவம் அருணாசல ஸ்தலம். ஆரம்பே சாம்ராஜ்யம் ஆதிசம்பவம்[3].

---

[1] The Tamil 1800 years ago p. 66. [2] அப்பொழுது என்று வாசிக்க. [3] இது சுலோகமாக இருந்தாலும் பொருள் விளங்காதபடி மிகவும் பிழைபட்டிருக்கிறது.

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் மேதினி ஈசுரன் அரிய ராயவிபாடன் பாஷைக்குத்தப்புவார்கண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு கொடாதான் துலுக்கதளவிபாடன் துலுக்க மோகன மதமவித்தோன் எம்மண்டலமும் கொண்டு ஈழமும் திறைகொண்ட ராசாதிராசபரமேசுரன் துரங்காதிபதி மன்னிய[1] சுலுத்தான் நாவலம் பெருந்தீவு நவமணிவேந்தன் நவகோடிநாராயணன் பூலோகபயங்கரன் மேமந்? திறைகொண்ட விருதநாராயணன் சதுஸ்சமுத்திராதிபதி பூர்வ தட்சின பச்சிம உத்தர கெசவேட்டை கண்டருளி ஸ்ரீவீரப்பிரதாப கிருஷ்ண மகாதேவராயர் பிருதிவிராச்சியம் பண்ணியருளாநின்ற சாலிவாகனசகாப்தம் சுசாருநிக்கு மேல் செல்லாநின்ற ஆங்கிரஸ வருஷத்தில் மகரகுருவாரத்தில் பூர்வபட்சத்துப்பஞ்சமியும் சுபாமயோகமும் பாலவாகரணமும் உத்திராடநட்சத்திரமும் பெற்ற பிற்றைநாள் (1)[2] புழற்கோட்டம், ஞாயிறுநாடு, அம்பத்தூர்நாடு,[3] ஆருடிநாடு, ஆத்தூர்நாடு, கண்ணியநாடு,[3] எழுமூர்நாடு; (2) புலியூர்க்கோட்டம், குன்றத்தூர்நாடு, போரூர்நாடு, மாங்காடுநாடு, அமரூர்நாடு, கோட்டூர்நாடு; (3) ஈக்காட்டுக்கோட்டம்[4] காக்கனூர், கச்சிநாடு; (4) மணவூர்க்கோட்டம், பாசாலிநாடு, இலத்தூர்நாடு,[5] கொண்ணூர்நாடு, புரிசைநாடு, பெருமூர்நாடு; (5) செங்காட்டுக்கோட்டம்,[6] பென்னலூர்நாடு, அநிகத்தூர்நாடு; (6) பையூர்க்கோட்டம், வீரபத்திரநாடு, செண்ணூர்[7] நாடு, வணகல்[8] நாடு, தண்ணூர்நாடு; (7) எயிற்கோட்டம், தண்டகநாடு, மாகறல்நாடு[9] கோனேரிநாடு; (8) தாமற்கோட்டம், கரிவிடுநாடு,[10] வடகரை வல்லநாடு;[11] (9) ஊற்றுக்காட்டுக்கோட்டம், பாலையூர்நாடு, தாமனூர்நாடு, குண்ணநாடு,[12] திருவேளூர்நாடு;[13] (10) களத்தூர்(க்)கோட்டம், குருமாநாடு, வல்லியூர்நாடு,

[1]மன்னே. [2]நகலளவிற்குள உள்ள எண் கோட்டங்களின் மொத்தத்தையறியக்குறிக்கப்பட்டது. [3]இவை கனகசபைப்பிள்ளை புத்தகத்திற் காணப்படவில்லை. [4]மணவிற்கோட்டம் என்று கல்வெட்டுக்களிற் காணப்படுகிறது. [5]கான்றூர்நாடு என்று 1910-ம் ஆண்டு 232 நிர். கல்வெட்டிற் காணப்படுகிறது. [6]இரண்டாயிரவேலிப்பற்று என்றுஞ் சொல்லப்படும்; 1910-ம் ஆண்டு. நிர். 256. [7]சேவூர் என்பர் வி. க. [8]வெங்கல்நாடு. [9]மாகறல்நாடு காலியூர்க்கோட்டமாகநினைக்கப்பட்டகாலமுமுண்டு; 1908ம் ஆண்டு நிம்பர் 56. [10]கரிவேடு, என்று பி-ம். இதனையே தாமல்நாடு என்றும் வழங்கினர். 1915-ம் ஆண்டு 204 நிர். [11]வடகரை என்ற அடையின்றி வல்லநாடென்றே வழங்கப்பட்டது. [12]குன்றநாடு. பி-ம். 1909-ம்ஆண்டு நிர். 284. [13]நீர்வேளூர்நாடு. வி.க.



பாதூர்நாடு, நடுநாடு; (11) செம்பூர்(க்)கோட்டம், பிறையூர்நாடு, பட்டணநாடு, முருக்கூர்நாடு; (12) ஆமூர்க்கோட்டம், மீகுமிழிநாடு,[1] பழூஊர்நாடு; (13) ஈத்தூர்(க்)கோட்டம், அரமரங்கநாடு; (14) வெண்குன்றநாடு, பெருநகர்நாடு, அரசூர்நாடு, மருதாடுநாடு, நல்லூர்நாடு, தெள்ளாறுநாடு; (15) பலகுன்ற(க்)கோட்டம், பாராஞ்சிநாடு,[2] தச்சூர்நாடு, மெயூர்நாடு, சிங்கம்பொருதவளநாடு, பெருந்தமிரிநாடு;[3] (16) இளங்காட்டு(க்)கோட்டம், பொன்னூர்நாடு, தென்னுத்தூர்நாடு; மாகுன்னநாடு; (17) காலியூர்(க்)கோட்டம், காழியூர்நாடு[4] திருப்பூவைநாடு[5], விற்பேடுநாடு, எரிகிதாநாடு[6], பாலூர்நாடு; (18) சிறுகாரைக்கோட்டம், ஆய்ந்தநாடு[7]; (19) படுவூர்(க்)கோட்டம் பெருமதநாடு,[8] ஆற்காடுநாடு, செங்குன்றநாடு: (20) கடிகை(க்)கோட்டம், பெருங்காஞ்சிநாடு, மேல்களத்தூர்நாடு, பாராஞ்சிநாடு, (21) செந்திரிகை(க்)கோட்டம், பேரையூர்நாடு,[9] வற்குளநாடு, ஆலத்தூர்நாடு, அருங்குள நாடு; (22) குன்றபத்திரக்கோட்டம், மாங்களநாடு, கிண்ணைநாடு, வெங்களூர்நாடு; (23) வேங்கிடக்கோட்டம், சூடகரைநாடு, தொண்டைமாறுநாடு, பொத்தப்பிநாடு; (24) வேலூர்(க்) கோட்டம் ஒழுகரைநாடு, வானூர்நாடு[8] சோழவல்லிநாடு[8], விலாடபுரநாடு,[8] செம்புரிநாடு,[8] தென்மலிநாடு,[10] மாத்தூர்நாடு ஆகக்கோட்டம் உயசு, நாடு எயகூ நத்தம் ருசுள; இந்த இருபத்துநாலு கோட்டத்தாரும் எழுபத்தொன்பதுவளநாடு அவர்களும் அருணசலத்தின அனைவரின் சம்மதியாகக்கூடியிருந்து இந்தப் பெரியநாட்டுமடத்தில் எழுந்தருளியிருக்கப்பட்ட அழியாவிரதம்பூண்ட தம்பிரான் அவர்களும் நாங்கள் பெரியநாட்டவர்கள் தாமிரசாசனபட்டயம் கொடுத்தபடி:—இந்தப் பெரியநாட்டுமடம் கரிகாலசோழராசா முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகையில் அப்பா(ச்சு) கிருஷ்ணராயரும் சாளுவநாயகரும் அருணசலத்தில் ஆயிரக்கால்மண்டபம் முதற்பிராகாரத்திலே கட்டவேணுமென்று அழியா

[1]குமிழிநாடு. கல்வெ. [2]பாரூர். வி. க; கல்வெ. [3]இது படுவூர்க்கோட்டத்திற் காணப்படுகிறது. வி. க. [4]கழுமலநாடு பி - ம். [5]திருப்பூழிவனம். வி. க. [6]எரிகில்நாடு. பி - ம். [7]கரைவழி ஆய்ந்த நாடு பி-ம். [8]இவை காணப்படவில்லை. வி. க. [9]பொன்னையூர் வி. க. [10]மாத்தூர்நாடு என்றிரண்டு காணப்படுகிறது. வி.க.

விரதம்கொண்ட தம்பிரானவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். கேட்கு மிடத்தில் அடியேனாலே உத்திரவுபண்ணக்கூடாது; முன் கரிகால சோழராசா முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகிற தருமமென்று இந்த வர்த்தமானம் எல்லாம் இருபத்துநாலு கோட்டத்துக்கும் எழுபத்தொன்பது வளநாட்டார்களுக்கும் விசயநகரத்திலே அம்பி அறம்வளர்த்தமுதலியாரவர்களுக்கும் திருமுகம் அனுப்பிவைச்சது; அதே திருமுகம் பார்த்துக்கொண்டு இருபத்துநாலுகோட்டத்தாரும் எழுபத்தொன்பது வளநாட்டாரும் அம்பி அறம்வளர்த்தமுதலியாரவர்களும் அருணாசலத்திலே வந்து இவ்விடத்தே நடந்த வர்த்தமானமெல்லாம்கேட்டு உள்பட்டுக்கொண்டு இருந்தார்கள்.[1] கிருஷ்ணராயரும் சாளுவநாயகரும் காஞ்சித் தலத்திலே ஆயிரக்கால் மண்டபம் தங்களுடைய புண்ணியவசமாகக்கட்டிமுடி(யு) (கிற தே. அப்படியே அருணாசலத்திலேயும் ஆயிரக்கால்மண்டபம் கட்டவேணு மென்று கேட்டார்கள். நல்லது; கரிகாலசோழமகாராசா நாள்முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகிறதர்மமென்று சொன்னார்கள். நல்லது என்று உள்பட்டுக்கொண்டு அந்த மடம் கிழக்குமேற்கு அடி உாஎயிரு, தெற்குவடக்கு அடி உாகூயிரு இதுக்குக்கிரயம் பொன் ருா?[2] இந்தப் பொன் ஐந்நூறும் வாங்கி அழியாவிரதம்கொண்ட தம்பிரானவர்களும் அம்பி அறம்வளர்த்த முதலியார் அவர்கள் (உம்) இந்த ஐந்நூறுபொன்னும் உண்ணாமலையம்மன் திருக்கோவிலுக்கு பொன்தகடு விமானத்துக்குப் போட்டுவைச்சார்கள். அருணாசலேசுரன் சன்னிதி பெரிய கோபுரத்துக்கு [க] தென்கிழக்கு. ஆக பெரிய நாட்டுமடத்துக்கு விநாயகபூசை பண்ணுகையில் கிருஷ்ணராயரும் சாளுவநாயகரும் அழியாவிரதம் கொண்ட தம்பிரான் அவர்களும் அம்பி அறம் வளர்த்த முதலியார் அவர்களும் இருபத்துநாலுகோட்டத்தாரும் எழுபத்தொன்பது வளநாட்டாரும் என்சம்மதியாக விருந்து மடம்கட்டிவைச்ச இந்த

---

[1] சம்மதிக்காமலிருந்தார்களென்று காண்கிறது. [2] கொடுக்கிறோமென்று சொன்னார்கள்' என்பது விடுபட்டிருக்கவேண்டும் இங்கே வாசகம் ஒட்டவில்லை.



மடத்தில் அழியாவிரதம்கொண்ட விநாயகரையும் அப் (ப) (பொழுது) தம்பிரானையும் இரண்டுபேரையும் எழுந்தருளப் பண்ணிவைச்சு அவர்களுக்கும் திருமஞ்சனம், திருமாலை, திருமேற்பூச்சு, திருப்பரிவட்டம், திருநீறு, நிவேத்தியம் இதுமுதலான அருணாசலஈசுவரன் உண்ணாமலையம்மன் இவர்களுக்கு ஒருகாலம் அழியாவிரதம்கொண்ட சந்தி அபிஷேகம் நிவேத்தியம் தீபாராதனைக்கு மேலைப்பாலையூர்கிராமம் சர்வமானியமாக விட்டது பொன் சா. இந்தப்பொன் நாலூறும் வாங்கிக் கட்டளை நடப்பிச்சுக்கொண்டு வருகையில் அழியாவிரதம்கொண்ட தம்பிரானவர்கள் நம்முடைய குமாஸ்தா மாயேச்சுர நினைக்கமுத்தி ஒதுவாரை நம்முடைய பெரியநாட்டுமடத்துக்கு நிருவாகம் உள்ள(ள)வும்,[1] சுவாமி சன்னிதியிலே காலாஞ்சாதி வெள்ளாழருக்குக் கரிகாலசோழ மகாராசாநாள்முதல் இற்றைவரைக்கும் நடந்துவருகிற' து) மடாதிபத்தியம், அனுக்கிரகம், ஸ்ரீமுத்திரைமோதிரம், சுவாமிசன்னிதியிலே நடந்துவருகிற மரியாதையும் முந்தினவிபூதி, முந்தினசந்தனம், முந்தின பிரசாதம், முந்தினவெகுமானம், முந்தின தாம்பூலம் அழியாவிரதங்கொண்ட தம்பிரானவர்களு(க்கு)ம் அம்பி அறம்வளர்த்தமுதலியாரவர்களு(க்கு)ம் இருபத்துநாலுகோட்டத்தாரும் எழுபத்தொன்பது வளநாட்டாரும் ஆயிரத்துத்தொளாயிரம் நத்தத்தாரும் என் சம்மதியாகக் கூடி கிருஷ்ணராயர் சமுகத்திலே தாம்பிரசாஸனபட்டயம் எழுதிக் கொடுத்து கர்த்தனை நினைக்கமுத்தி ஓதுவாருக்கு அம்பி அறம் வளர்த்தமுதலியார் அவர்களும் பெரியநாட்டவர்களும் திட்டம்பண்ணினது. காஞ்சிபுரதலத்திலே திட்டம்பண்ணினபடிக்கு அருணாசலத்திலே மயேச்சுர நினைக்கமுத்தி ஓதுவார் அவர்களுக்கு நாங்கள் பெரியநாட்டவர்கள் அனைவர்களும் என்[2] சம்மதியாக நாங்கள் கட்டளையிட்டது தலைக்கட்டுக்கு எழுபணம், கல்யாணத்துக்கு மாப்பிள்ளைவீட்டுக்கு மூணுபணம்; பெண்வீட்டுக்கு மூணுபணம்; அமுதுபடி கறிகாய் முதலானது, சந்தன தாம்பூல வஸ்திரம் இதுமுதலானது எல்லாம் இரட்

---

[1] செய்யும்படி; என்று கூட்டி வாசிக்க. [2] தம்?

டைப்படியாகத் தாம் வருஷாவருஷந்தோறும் அனுபவித்துக்கொள்ளுவீர்களாக. இந்த பெரியநாட்டுமடத்தில் தாம் பிச்சைமுஷ்டியிட்டுக் கொண்டு வந்த பரதேசிகளுக்கு அன்னம்கொடுத்துக்கொண்டு இந்தப் படிக்குத் தாம் நடப்பித்துக்கொள்ளக் கடவீராகவும். பெரியநாட்டு மடத்து தர்மத்துக்கு நாங்கள் பெரியநாட்டவர்கள் கொடுத்த தாமிர சாதனம். தமக்கு பாரம்பரிய சந்தான பாரம்பரியம் சந்திராதித்தவரையும் இந்தப்படிக்கு நாங்கள் பெரியநாட்டவர்கள் நடக்கக்கடவோமாகவும். இந்தப் பெரியநாட்டுமடத்துத் தர்மத்துக்கும் தாமிரசாசனத்துக்கும் யாதாமொருவர் அகிதம் பண்ணினார்களோ அவர்கள் காசி, காஞ்சி, ராமேசுரம், பிரயாகை, குருக்ஷேத்திரம், கேதாரம், நீலகண்டம், இந்த ஏழு ஸ்தலத்திலேயும் கோகத்தி, பிரமகத்தி, சிசுவத்தி, குருவத்தி, மாதிரு, பிதுரு, சிசுவர்க்கம் கொன்றதோஷத்திலே போகக்கடவீராகவும். இந்தப் படி சம்மதிச்சு நாங்கள் பெரியநாட்டு அவர்கள் அனைவர்களும் பெரிய நாட்டு தர்மத்துக்கு தாமிரசாதனபட்டயம் கொடுத்தோம். திருவண்ணாமலை பெரிய நாட்டுமடத்துக்கு கர்த்தரான நினைக்க முத்தி ஒதுவார்க்கு இருபத்துநாலு கோட்டத்தாரும் எழுபத்தொன்பது வளநாட்டாரும் ஆயிரத்துதொளாயிரம் நத்தத்தாரும் நாம் இனி இருபத்துநாலு கோஷ்டத்தார் எழுபத்தொன்பதுநாட்டார் தூசா நந்தத்தாரோம் இவர்கள் கையெழுத்து.

சோமசுந்தர தேசிகன்.

உ

கணபதி துணை

# கலீலவனார் சரித்திரம்.

மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்
ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A. எழுதியது.

## அதிகாரம் I.

### தோற்றுவாய்.

நாகரிகம்பெற்ற மேற்றிசைநாடுகளுள் கிரேக்கதேயத்திற் கடுத்தாற்போல இத்தாலியதேசமே மிகத் தொன்மைவாய்ந்ததாகும். இத்தேயத்தினது இயற்கையழகும் செயற்கையழகும் உலகமுழுதும் வெகு பிரசித்தமாம்: "நேப்பிளைப் பார்த்தே இறக்க" என்னும் ஓர் ஆங்கிலப் பழமொழியுண்டு. அப்பழமொழி இயற்றியோர் அவ் வித்தாலியநகரினது அழகைக் கண்ணுற்றோரே வாழ்க்கைப்பயனைப் பெற்றோர், மற்றையோர் பெற்றும் பெறாதவரேயாவர், எனக் கருதினார்போலும். இக்காலத்திலும் மேனாட்டியாத்திரைபுரியும் இந்தியர்கள், இந்நாட்டினது சிறப்புக்களைக் காணாது திரும்பார்கள். பண்டைச்சரித்திரச் சிறப்புவாய்ந்து, கத்தோலிக்க உலககுருவாகிய போப் என்பாரது தலைநகராய் அமைந்து விளங்கும் உரோமாபுரியும், கவிகளது வருணனைமுற்றிய புளோரென்ஸ்நகரமும், நீரில்நாட்டிய சோதிநகராகிய வெனீஸ்நகரமும், இயற்கையற்புதக்காட்சிகளுட் சிறந்ததாகப் பெரிதும் வியக்கத்தக்க, "சாய்ந்தகோபுரம்" நிலைநிற்கப்பெற்ற பீசாநகரும், உலகெங்கும் புகழ் பெற்ற நேப்பில்ஸ்நகரும், இடையிடையே பற்பல சிற்றூர்களும், போ முதலிய அநேக ஆறுகளும், இருமருங்கிலும் நிழன்மரங்களும் காட்சி

பழுதகளும் பொருந்தி நீண்டுசெல்லும் சாலைகளும், கண்ணைக்கவர்ந்து தமது நறுமணத்தினாலும் உருசியினாலும் செல்லுவோரது வேட்கை மீக்கூரும்வண்ணம் அபரிமிதமாகச் செடி கொடி மரங்கடோறும் நிறைந்து நிற்கும் நறுமலர்களாலும் கனிவருக்கங்களாலும் அழகுவாய்ந்த சோலைகளும், என்றைக்கும் வேனிலே எனக் கருதும்வண்ணம் பொற்பொலிவுபொருந்திய வானத்தினழகும் இந்நாட்டின்கண் ஒருங்கே அமையவனவாதலின் இந்நாட்டினைக் காணப்பெற்றோரது அரும்பேற்றினை என்னென்றுரைப்பாம்!

இவ் வித்தாலியதேயத்திற் றோன்றிய மானிடமணிகள் பலராவர். ஐரோப்பாமுழுதையும் உரோமாபுரியின் தனியாட்சிக்குட்படுத்திய உயர்ந்தோரான யூலியசீசரும், மக்களது காதிற்கினிய மொழிமாரி பொழிந்து சபாவல்லவராய்விளங்கிய சிசரோவும், தான் காதலுற்ற அழகாசியாகிய பீற்றிசினையடையப்பெறாது, அப் பெருங்காதலே காரணமாக இடைவிடாது மனங்கசிந்து நரக துறக்க வநுபவங்களைத் தெய்வப்புலமையானுய்த்துணர்ந்து காப்பியமியற்றிவைத்த ஆல்பியரி தாந்தியும், மேனாட்டினில் 'ரினைசான்ஸ்' எனப்படும் அறிவுமறுமலர்ச்சியைத் தந்துவளர்த்த அறிவுநூற் றந்தையாகிய பொக்காச்சியோவும், சங்கீத சாகித்திய சிற்ப சித்திரக்கலைகளிலும் தருக்க வேதாந்த சாஸ்திரங்களிலும் புலமைபெற்று அரசாங்கத்தில் உயர்தரப்பதவிகளைவகித்து உலகாநுபவத்திற் பெரிதும் நிறைந்து எங்கெங்கும் இசைபரப்பி வாழ்ந்த லியனார்டோ வின்சியும், சிற்ப சித்திரக் கலைகளிற் றுறைபோகிய மைக்கல் ஆஞ்சலோவும், தியாகபுத்தியிற் சிறந்தோராகிய காரிபால்டி, மஜினி யாகிய தேசபக்தர்களும், சாஸ்திர ஆராய்ச்சியையே தமது அருந்தொண்டாகப் பூண்டு அதன் காரணமாக 'இன்குசிஷன்' எனப்படும் மதமன்றத்தினாற் சிறைப்படுத்தப்பெற்றுச் சொல்லொணாத்துன்பங்களையும் அநுபவித்து வானசாஸ்திரத்தை உலகினுக்கீந்த பெருந்தகையாளராகிய கலீலவனாரும் இவ் வித்தாலியநன்னாட்டின் மக்களேயாவர். இனி நமது சரித்திரத்தலைவராகிய கலீலவரது வரலாற்றினைத் தொடர்ந்துவதே ஏற்புடைத்தாகும்.



## அதிகாரம் II.

### வாலிபப்பருவம்.

இத்தாலியாதேயத்து மாகாணங்களில் ஒன்றாகிய தஸ்கனியிலுள்ள பீசாநகரில் போனஜூட்டியெனத் தொன்மைவாய்ந்த பிரபுவமிசமொன்றுண்டு. அம்மரபிலுதித்தவராகிய வின்செஞ்சோ கலிலீ என்பார்க்கு கி. பி. 1564-ஆம் பிப்பிரவரிமீ 18உ அன்று ஓர் ஆண்குழவி பிறந்தது. அதற்குக் கலீலவன் எனப் பெயரிட்டார்கள். வின்செஞ்சோவென்பார் மற்றைப் பிரபுக்களைப்போல வீணே காலத்தைப் போக்குபவரல்லர். இவருக்குச் சங்கீதத்தில் மிகுந்த பிரியம். இரஸவாதம், அருங்கருவிகளையியற்றல், இயற்கைச்சாஸ்திர ஆராய்ச்சி முதலியவற்றில் இவருக்கு மிகுந்த பற்றுண்டு. இது பற்றேயன்று, விண்பயித்தியமே; என்று கூறுவார் பலரே யென்றால் அக்காலத்தவரின் குறுகிய நோக்கம் பெரிதும் விளங்கும். இவர் மிகுந்த விரிவான நோக்கமும் எவ்விஷயத்திலும் உண்மையைக் காண்பதில் அடங்காத விருப்பமும், உடையவரென்பது நிச்சயம். பிரத்தியட்சப்பிரமாணத்தாற் பகுத்தறிதற்கு விஷயமான எந்தவிதச்சித்தாந்தத்தையும் அறிவினால்மட்டுமேயன்றிப் பற்பலவிதமாகப் பயின்ற பிரத்தியட்சப் பரிசோதனைகளாலும் நன்கு ஆராய்ந்தே ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும் என்பதும், அவ்விதம் வெகு எச்சரிக்கையுடன் செய்த பிரத்தியட்சப் பரிசோதனைகளாற் கிடைக்கும் முடிவும் சித்தாந்தமும் மாறுபாடுகொள்ளுமாயின், அச்சித்தாந்தத்தின் தொன்மைபற்றியோ, அழகுபற்றியோ, அதனை இயற்றியோரது பெருமைபற்றியோ, அப்பரிசோதனைமுடிவை அலட்சியம் செய்யாது, பரிசோதனை பிழைபட்டிருப்பின் அதிலுள்ள தவறு யாதெனக் கண்டுபிடித்துக்காட்டியோ, அல்லது சரியானால் சித்தாந்தத்தை ஏற்றவாறு ஒழுங்குபடுத்தியோ அளிக்கவேண்டியது சாஸ்திராசிரியரது கடமை என்பதும் வின்செஞ்சோ அவர்களது முக்கியக்கொள்கைகளாயிருந்தன. இக்கொள்கைகளே தற்காலத்திலும் மேனாட்டுச் சாஸ்திரங்களுக்கு வன்மையளித்துவருகின்றன. இத்தகைய விரிந்த நோக்கத்

துடன் தனது அறிவின் பெருக்கத்தையே பெரிதும் பாராட்டிக் கல்வி வழியே முயற்சி பொருள் காலம் மூன்றினையும் இடைவிடாது செலவிட்டுவந்ததினால் அவருடைய தந்தையாரளித்த செல்வமுழுதும் மிகச் சுருங்கிவிட்டது. ஆனால் வினைபின்பயன் வீணோ? அவரது முயற்சிப்பயனெல்லாம் சிறு கலீலவனிடத்துச் சிறப்புற்று விளங்கின. அவனுக்குக் கிடைத்திருந்த பொருட்செல்வம் அழிந்தாலென்? அதனினும் உயர்ந்தசெல்வத்தைச் சிறுவன் பிதுரார்ச்சிதமாகப்பெற்றான். அவனிடம் உண்மையான பிரபுவுக்குரிய இலக்கணங்கள் பொலிவுடன் விளங்கின. மக்கட்குப் பேரணியாகிய சங்கீத சிற்பக் கலைகளில் உயர்ந்த அறிவும், கருவிகளமைப்பதில் அருந்திறனும் உண்மையையே பெரிதும் விரும்பி அதன்வழியே நிற்கும் உறுதிப்பாடும் இயற்கையாகவே அவனிடம் குடிகொண்டிருந்தன.

இத்தகைய உயர்ந்தஇயல்புகள் ஒருகுழந்தையிடம் பொருந்தி நின்றால் எத்தந்தையும் மனமுவந்து பூரிப்பானன்றோ? ஆனால் இப்பொதுவியல்பு வின்லென்லோ விஷயத்திற் சிறிதும் பொருந்தாது அவரதுமனத்திலுண்டாயது உவகையல்ல, அமைதியின்மையே. இதிலொரு சிறிதும் ஆச்சரியமின்று. தனது ஆராய்ச்சிவழியைப் பின்பற்றிச்செல்வதால் வறுமைப்பிணியுறுவதே திண்ணமென்பதைத் தனது வாழ்க்கையிலேயே அறிந்துகொண்டாரன்றே? அப்பிணியினது கொடுமைகளைத் தன்மாட்டுத் தன்புறத்தாது அகற்றிநின்றது தனது முன்னோர்கள் சேமித்துவைத்த பொருளன்றோ? அப்பொருளினையோ தன் மைந்தனுக்குத் தான் அளிக்கவில்லையே! அவனும் தன்னைப்போலக் கணிதத்தையும் இயற்கைஆராய்ச்சியையும் பின்பற்றுவானாயின் அவன்கதி அதோகதியாமன்றோ? இக்காரணம்பற்றியே தன்மகன் சிறுவனாயிருக்கும் பொழுது விளையாட்டாகச்செய்துகொள்ளும் கருவிகளைப்பார்க்குந்தோறும் பல்வேறுவிஷயங்களைப்பற்றி அவருடன் வினவுந்தோறும் வின்லென்லோவுக்கு மிகவும் அச்சமே உண்டாயிற்று. ஆதலால் தனது மைந்தனை அவ்வழிகளிற் செல்லவிடாது அக்காலத்திற் பெரிதும்



இலாபமளிக்கும் தொழிலாயிருந்த வஸ்திரவியாபாரத்திலேயே அமர்த்த வேண்டுமெனத் தீர்மானித்தார்.

விரும்பியதொழில் வியாபாரமேயானாலும் எழுதப் படிக்கத் தெரிய வேண்டுமாதலின் வின்லென்லோ தனது புதல்வனை ஒரு பாதிரிமார் பள்ளிக்கூடத்திற் கனுப்பினார். நல்லுரமிட்டநிலத்திலோர் நல்வித்து வீழ்ந்ததேபோல் அவ்வுயர்தரப்பள்ளியிற் கலீலவனார் சேர்ந்ததால் மிகுந்த நற்பயன்களே விளைந்தன. பசி மிகுந்து நாவறண்டு அல்லலுற்றோர்க் களித்த நல்லமுதும் நன்னீருமேபோன்று கலீலவனார்க்குக் கல்வி கேள்வி யின்பங்கள் கரவாதுவழங்கப்பெறவே அவர் அளவளாவி விருப்புடன் ஏற்றுத் தனது ஆசிரியரும் வியக்கும்வண்ணம் அறிவில் நிரம்பி விளங்குவாராயினர். தனது தாய்மொழியில்மட்டுமேயன்றிக் கிரேக்கம் லத்தீன் மொழிகளிலும் மிகுந்த தேர்ச்சியடைந்தார். இசைக் கருவிகளின் நுட்பங்களை நன்குணர்ந்து, கேட்பவர்மனதைக் கவரும் வண்ணம் ஒலியெழுப்பிப் பாடுவதில் அருமையாகத் தேர்ந்தார். அவருடைய இறுதிக்காலத்திற் பலவேறு துன்பங்கள் மிகுந்துதோன்ற இச்சங்கீதப்பயிற்சியே அவரது ஆற்றுதற்கரிய மனநோய்க்கு ஒப்பற்ற மருந்தாயிற்று. மேலும் சித்திரக்கலையிலும் மிகுந்த பயிற்சிபெற்றுப் பற்பல முதிர்ந்த கலைவல்லாரும் இவரது மதிப்புரையைப் பெரிதும் போற்றும்வண்ணம் இவ் விளம்பிராயத்திலேயே அந்நூலறிவிலும் மிகுந்தார். கி.பி. 1581-ஆம் நவம்பர்மாதத்திற் கலீலவர் மெற்றிக்குலேஷன்பரீட்சையில் தேர்ச்சியடைந்தார்.

இவ்வளவு சிறப்புடன் பள்ளிப்படிப்பை முடித்த மைந்தனுக்கும் துணிவியாபாரத்திற்கும் வெகுதூரமென்று வின்லென்லோ முடிவுகொண்டார். மேலும் உயர்தரக்கல்வியேயன்றி வேறொன்றும் தனமகனுக்குப் பொருத்தமுறாதெனக் கருதி உயர்தர மருத்துவப்பயிற்சியையளிப்பதே நலமெனத் துணிந்து கலீலவரைப் பீசாநகரத்துப் பல்கலைக்கழகத்திற் சேர்த்தார். தன் மகனுக்குக் குழந்தைப்பருவம் முதற்

கொண்டு கணிதத்திலேயன்றி மருத்துவத்திற் பற்றுச் சிறிதுமில்லையெனத் தமக்குத் தெரிந்தும் வின்லென்லோ இவ்வாறு செய்தது சரியே. கணிதப்பயிற்சியைத்தொட்டாலதனோடிணைபிரியாத சாஸ்திர ஆராய்ச்சியும் கூடச்சேர்ந்து தன்புதல்வனை வறுமையிலாழ்த்திவிடுமென்ற பயம் அவர்க்கிருந்ததென முன்னர்க் கூறினோம். ஆராய்ச்சிகளிற் பொருளைச் செலவிடாமலிருந்தபோதிலும், கணித ஆசிரியத் தொழிலைக்கொண்டே வயிறுவளர்ப்பது அசாத்தியமெனக் கருதித் தன்மகனுக்கு வைத்தியத் தொழிலைவேண்டினார். அக்காலத்துமக்கள் கணிதத்தை வெகு இழிந்ததாகவும், மருத்துவத்தை மிகச் சிறந்ததாகவும் கருதினார்கள். அப்பொழுது கணிதசாஸ்திரம் உயிரற்று இருந்ததெனவே கொள்ளவேண்டும். ஒரு சிறுபான்மையோரே அதற்குரியநூல்களைப் பிரத்தியக்ஷ ஆராய்ச்சிக்குச் சிறிதேனும் உட்படுத்திப் பரிசோதித்துத் தெளிவுறாமல் மிகுந்த பிரயாசையுடன் பொட்டை நெட்டுருவாகப் பயின்று அந்நூல்களின் சூத்திரங்களை அவரவர்கள் யுக்திக்கேற்றவாறு பலவாறாகப் பொருள்கூறிவந்தார்கள். அந்நூலினை உயிர்ப்பித்து உலகத்தார் விரும்பும்வண்ணம் அழகுசெய்துகாட்டுவதற்கு வேண்டிய ஆற்றலற்றவராய் இருந்தனர். ஆதலின், மக்களது ஆதரவு குறைந்து அந்நூலும் குன்றியதால் அதனைப் பயின்றோரும் இழிந்தநிலையெய்தினர். கணிதமும் அதனைப் பயின்றோரும் இவ்வாறாக மருத்துவம் ஆக்கம்பெற்று மருத்துவர் உயர்நிலையுற்றனர். இதற்குக் காரணம் வெளிப்படையே. மக்கள் கணிதத்தை மறந்தால் தலை நோகமாட்டாது; மருத்துவத்தைப் புறக்கணித்தாலோ தீராப்பிணியுண்டாம். கணித ஆசிரியரை அநாதரவு செய்தால் உயிருக்குக் கேடில்லை; ஆனால், பிணிகளைத்தீர்க்கும் பண்டிதரை விரோதித்து உயிர்வாழ்தல் ஒருகாலும் இயலாது. ஆகலின் அக்காலத்து மக்கள் எக்காலத்தவரையும்போன்று கைகண்ட பயனளிக்குந் தன்மையைக் கொண்டே சாஸ்திரங்களையும் மதிக்கலாயினர். எனவே, அக்காலத்துக் கலைக்கழகங்களிற் கணிதத் தலைமை ஆசிரியர்க்கு மாதச்சம்பளம் சுமார் 16 ரூபாயும், மருத்துவ ஆசிரியருக்குச் சுமார்



500 ரூபாயும் என்றால் அதில் யாதொரு ஆச்சரியமும் இல்லை வின்லென்லோ தமது மைந்தனுடைய கல்வியிற் கணிதத்தை வெறுத்து மருத்துவத்தையே விரும்பி ஏற்றானென்பதும் விந்தையன்று.

தந்தையாரின் மனதுக்கிசைந்தவாறே கலிலவரும் பீசா யூனிவர்சிடியில் மருத்துவமாணவராகப் பயின்றுவந்தார். அப்பொழுது ஒரு நாள் அவர் தேவாலயத்திற் றொழுதுகொண்டிருக்குங்கால் ஒரு சிறு நிகழ்ச்சியைக் கண்ணுற்றார். அதன் வரலாறு பின்வருமாறு. ஒருவன் அவ்வாலயத்தின் விட்டங்களிலிருந்து சங்கிலிகளிற் றொங்கிய சரவிளக்குகளைப்பொருத்திக்கொண்டு செல்லுங்கால் அவற்றிலொன்றைச் சிறிது அசைத்துச்செல்ல நேர்ந்தது. அவ்விதம் அசைக்கப்பெற்ற விளக்கு முன்னும் பின்னுமாக ஆடத்தொடங்கிற்று. அதனைக் கண்ணுற்ற கலிலவருக்கு அவ்வாட்டங்களின் ஒழுக்கத்தைநோக்கச் சற்று வியப்புண்டாயிற்று. உண்டாகவே ஒவ்வோராட்டத்திற்கும் எத்துணைகாலம் வேண்டியிருந்ததென்பதை ஆராயத்தொடங்கினார். அக்காலத்திலோ கடிகாரம் கண்டுபிடிக்கப்படவில்லை. காலமளக்கும் கருவிக்காக யாது செய்தாரெனின் தனது நாடியையே அதற் கேற்ற கருவியாகக்கொண்டார். தனது ஒருகைநாடியை மற்றொருகையாற்பற்றி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஆட்டங்களுக்கு எத்தனைமுறை தனது நாடி துடித்ததென்பதை ஆராய்ந்து ஒரு ஆட்டத்திற்கு வேண்டியகாலம் இவ்வளவெனக் கணக்கிட்டார். விளக்கின் ஆட்டத்தினது ஆக்கமும் வரவரக் குறைந்துசென்றது. மறுபடியும் முன்போலவே ஆட்டத்தின் காலத்தைக் கண்டுபிடித்தார். இப்படிச் செய்யவும் ஒருமுடிவுகொண்டார், அது யாதெனின், ஆட்டத்தினது ஆக்கம் சிறிதானாலும் பெரிதானாலும் ஒவ்வொரு ஆட்டத்திற்கும் வேண்டிய காலம் ஒரே அளவினதாகும் என்பதே. இந்த நிகழ்ச்சி கலிலவருக்குப் பெரிதும் ஆச்சரியமாயிருந்தது. அவர் தனது இருக்கைக்குச் சென்றதும் ஒரு மெல்லிய கயிற்றில் ஒரு கனமான வஸ்துவைக் கட்டித் தொங்கவிட்டு அதன் ஆட்டத்தை ஆராய்ந்தார், அதனைப் பன்முறை விரிவாகவும் இலேசாகவும்

இடம்பெயர்த்தும் அதன் ஆட்டகாலம் ஒரே அளவினதாய் இருந்தது. கயிற்றினது நீளம் ஒரே அளவினதாய் இருந்தவரையில் ஆட்டகாலமும் ஒரே அளவுபெற்று இருந்தது. கயிற்றினது அளவைச் சிறிது நீட்டவே ஆட்டகாலமும் நீண்டது. ஆகவே இக்கருவியைக் காலம் அளத்தற்குச் சிறந்ததாகத் தெளிந்தார். இக்காலத்தில் இதனை ஆங்கிலத்திற் பெண்டுலம் என்றும் தமிழில் இலம்பகம் என்றும் வழங்குவார்கள். கலிலவனுக்குப்பிற்பட்டகாலத்தவராகிய ஹைஜன்ஸ் என்னும் வானசாஸ்திரியார் இவ் விலம்பகத்தை முக்கிய உறுப்பாகக் கொண்டு ஒரு கடிகாரத்தை நூதனமாக அமைத்தார். இக்கடிகாரமே சிற்சில சீர்திருத்தங்களுடன் சமதுகாலத்தில் பெண்டுலக் கடிகாரமாக வழங்கிவருகிறது.

கலிலவனுரியற்றிய இப்பெண்டுலமானது பிற்றைக்காலத்தவர்க்கு மட்டுமேயன்றி அக்காலத்தவர்க்கும் மிகுந்த பயனளித்துவந்தது. நோயாளிகளுடைய நாடியின் விகிதத்தைக் கணக்கிடுவதற்கு ஏற்ற காலக்கருவியில்லாமல் அக்காலத்து மருத்துவர் பெரிதும் இடர்ப்பட்டு நின்றார்கள். அவருக்குப் பெண்டுலம் மிகவும் உபயோகப்படுவதாயிற்று. இப்பெண்டுலம் பல்ஸிலஜி அதாவது நாடிமானி யெனப் பெயர்பெற்று மிக உயர்ந்தோர்முதற் சாதாரண வைத்திய ரீறாகப் பலராலும் நன்கு மதிக்கப்பெற்று வழங்கப்பட்டது.

மேலும், இப்பெண்டுல தத்துவம் ஒரு நூதனமான கணிதம் சார்ந்த இயற்கைப் பொருளாராய்ச்சியாதலான் கணிதஆசிரியர் பலரும் இவ் விளைய மாணவரின் ஆற்றலைக்கண்டு வியப்புற்றார்கள். இவ் வாராய்ச்சியே கலிலவரின் சீக்கிரம் ஏற்படவேண்டியதோர் பெரிய மாறுதலுக்கு அறிகுறியாயிற்று.

[தொடரும்]

---



குடக்குங் குணக்கும் வடக்குந்தென் பாலுங் குவலயத்து
நடக்கும் படியாக் கெயாதர* மென்றுபேர் நாட்டினனே.'

என்ற செய்யுட்களால் அறியலாகும். இந்நூலின்கண் 11 தொகுதிகளே யுள்ளன. இது கட்டளைக்கலித்துறையில் அந்தாதியாக அமைந்துள்ளது. 11-ம் தொகுதியும் இங்ஙனமே அமையப் பெற்றிருக்கின்றது. உதாரணமாகக் கீழ்வரும் இரண்டு செய்யுட்களைக் காண்க:

'அரிகடல் மால்பன்றி யாயுதம் பச்சை யளியருக்கன்
எரிபுகை கிண்கிணி பெய்பா லம்மை யமன்கிளிகண்
வரிவளி யிந்திரன் மாருத நேமி மடங்கல்மது
பரிபகை செந்நெற் கதிர்தேரை வானரம் பாம்புபொன்னே.'

'பொன்னே ரிரும்பு சுரர்குரு மாடை பொலிவுதிரு
வென்னே ரழுதும் முழுப்பெற் றமுமெல் லொளிபகலாம்

---

* [இதனைக் 'கயாகரம்' என்றும் வழங்குவர். வேதகிரிமுதலியார் வெளியிட்ட இலக்கியக் களஞ்சியத்தில் 'கயாகர நிகண்டு' என்ற தலைப்பின்கீழ் அடியில்வருஞ் செய்யுள் கொடுக்கப்பட்டுள்ளது.

'பரிதியா தித்த னிமகரன் பதங்கன் பனிப்பகை விண்மணி யென்றாம்
அருணன்மார்த் தாண்டன் பாற்கரன் கதிரோ னாயிரங் கதிரினன் றபனன்
இருள்வலி சண்டன் சூரியன் மித்திரன் எல்லியம் போருக நண்பன்
தருமொளி வேந்தன் சூரனே சவிதா தரணிகண் சுடரவ னென்பார்'.

கெயாதரம் கலித்துறையாலியன்ற நூலென்பது எனக்குக் கிடைத்துள்ள ஏட்டுப்பிரதிகளால் உணரக்கிடக்கின்றது. சென்னைப் பிராசீன கிரந்தசாலையின்கண்ணுள்ள நூல்களின் பட்டிகையொன்றில் ஆசிரியர்பெயரறியப்படாத நிகண்டொன்றினைப்பற்றி வரைந்துள்ள குறிப்பும் இதனையே வற்புறுத்துகின்றது. வேதகிரிமுதலியார் காட்டுஞ் செய்யுள் எதன்கண் உள்ளதோ அறியக்கூடவில்லை. இங்ஙனமே ஏகபாதநிகண்டென வொன்றைக் காட்டி அதினின்றும் பின்வருஞ் செய்யுளைக் கொடுத்துள்ளார்:

'அத்திரி யொட்டகம் விண்ணுங் கருணையுமாகு மென்பர்
அத்திரி மாவும் வரையுங் கழுதையு மாகுங் கண்டாய்
அத்திரி திக்கயந் தன்னுடனே மிக்க வஞ்சனமாம்
அத்திரி தானுங் கறுப்புமென் றோதுவ ரான்றவரே'.

இவ்வகைச் செய்யுளடங்கிய நூலை ஏகபாதநிகண்டெனக்கூறுதல் ஏற்புடைத்தன்றெனல் வெளிப்படை. இந்நூலைக் குறித்தும் யாதும் அறியக்கூடவில்லை.]

தென்னே வனப்பு மிசைபா டலுந்தென் றிசையுமென்ப
கொன்னே பெருமை பயனிலி யச்சங் கொளும்பொழுதே.'

இவ்வாறாக அந்தாதித்தொடையில் அமைந்திருப்பது ஞாபகத்தில் வைத்துக்கோடற்குப் பெரியதொரு துணையாகும். இம்முறையாலும் வேறு பல நயங்களாலும் இந்நூல் சூடாமணிநிகண்டினும் சிறந்ததென்றுகொள்ளுவார் மிகப் பலர்.

பாரதி தீபம். கயாதரத்தைப்போலவே கட்டளைக்கலித்துறையில் அமைந்த பிறிதொரு நிகண்டுநூல் 'பாரதிதீபம்'. ஆனால் இது அந்தாதித்தொடையில் அமைந்ததன்று. இதனை யியற்றியவர் தேன்கடம்பை நகரினராகிய திருவேங்கடபாரதி யென்பது,

'மீன்றாவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன்
என்றுதல் கூறுங் கவிவேந்தன் பாரதி யேற்றமலர்த்
தேன்றாழ் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபந்தன்னில்
மூன்றா வதுவிலங் கின்பேர்த் தொகுதி முடிந்ததுவே'

என்ற செய்யுளா லறியலாகும். ஆசிரியர்காலம் 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியாயிருக்கலாமென்று தோன்றுகிறது. இந்நூலிலுள்ள செய்யுட்களின்பெயர்கள் பெரும்பாலும் அடைமொழியின்றிக் காணப்படுகின்றன. உதாரணமாக,

'அரனிறை வன்சிவன் சங்கர னித்த னமலன்கங்கா
தரனுமை பங்கன் மலைவில்லி தற்பரன் றானுச்சம்பு
புரதக னன்புனி தன்பிறை சூடி புலியதளோன்
பரசுத ரன்கயி லாயன் கபாலி பசுபதியே'

என்ற செய்யுளைக் காண்க. அடைமொழி யின்றிப் பெயர்களை யமைத்தும் பொருட்பெயர்களை மிகுதியாகத் திரட்டியும் செப்பமிக இந்நூல் இயன்றுள்ளது.

ஆசிரிய நிகண்டு. அடிமிக்கதொரு பாவினத்தால் பொருட்பெயர்களை மிகுதியாக வுட்கொண்டு, எளியநடையா லியன்று இக்காரணங்களாற் சூடாமணியினுஞ் சிறப்பெய்தி விளக்கும் பிறிதொருநூல் 'ஆசிரிய நிகண்'டாகும். கயாதரத்தைப்போலவே இதன்கண்ணும் 11 தொகுதிகளே யுள்ளன. இதனையியற்றியவர் தொண்டைநாட்டு ஊற்றங்காலென்னும் ஊரினரும், வளையறுப்போர்



குலத்தினரும், பாவாடைவாத்தியாரின் புத்திரரும், ஞானப்பிரகாசகுருவின் சீடருமாகிய ஆண்டிப்புலவர். நக்கீரரென்பதும் சாதிபற்றி யிவர்க்கு வழங்கிய பெயர். இது,

"மன்னுசெஞ் சிச்சீமை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்த*வூற் றங்காலில்வாழ்
வளையறுப் போர்குலன் பாவாடை வாத்தியார்
மைந்தனும் நற்கீரனே"

"மண்ணுளோ ரறியப் பருத்தனன் கயிலையான்
வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்த்ரவுப தேசஞ்செய் ஞானப்ர காசகுரு
வனசமல ரடிசூடுவோன்"

என்று வருவனவற்றால் உணரலாகும். இதன்கண் 11-ம் தொகுதி செவ்வையாக அமைந்துள்ளதென்றே கூறவேண்டும். சொல்லின் பொருள்கள் பெரும்பாலும் எண்களால் வரையறுத் துணர்த்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக,

"கஞ்சமிகு நீபமோர் தகழிவட் டம்படைக்
கலமேறு தாளமுடனே
கட்டிலெட் டும்பாண்டி லென்பர்செல் வம்பெருமை
கருமைமண் டிலம்விலங்கு
சஞ்சரிக மிகவெறுப் பொடுகமலை வரவழைத்
தல்பிண்டி பத்துமாவென்
றாகும்வெறி யாட்டுநாற் றங்கலக் கத்துடன்
சாறுவெம் பேய்வெறுவுதல்
எஞ்சல்பெறு வட்டமொடு துருவைபிற நாலும்வெறி
யெழுமோசை பற்றநாநேர்
ஏற்றநா தலநெடும் போதுபுனல் சோலைபல்
லியப்பண்ட மிவைபாணியாம்

*'வூற் றங்காலெனு, மாநகர்க் கதிபனுயர் பாவாடை வாத்தியார் மைந்தனாண் டிப்புலவனே' என்று மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்பிரதிகளிற் காணப்படுகிறது.

செஞ்சொலா வணங்கோட ரம்புனற் கரைபாகல்
திகழ்விலங் கின்வால்பசுச்
செய்வரம் பிவைகூல மென்று* முத் தமிழ் முனி
செப்புமிப் பொருளாகுமே"

என்ற செய்யுளைக் காண்க.

மேற்குறித்த நூல்களெல்லாம் நிகண்டுநூலென்ற ஓரளவில் அமைந்துநின்று சொற்பொருட்பெருக்கத்தாலும் ஞாபகத்திற்குதவும் தொடைநயத்தாலும் அடிநிமிர்ந்துசெல்லும் பாவினத்தாலும் பலவாறு செப்பமுற்றுவிளங்குவன. நிகண்டுகட்கும் தற்காலத்துவழங்கும் அகராதிகளுக்குமுரிய நெருங்கியதொடர்பினை யுணர்ந்து, அகராதிமுறையே இனிப் பிற்காலத்து வேண்டப்படுவதென்பதனை நன்கு தெளிந்து, அம்முறையில் நூலியற்றிய ஆசிரியர்களுடைய முயற்சிகளைக்குறித்து இனி விசாரிப்போம்.

நிகண்டுநூலை அகராதியாக விரித்து இயற்றமுயன்ற ஆசிரியர்கள் 16-ம் நூற்றாண்டின் இறுதியிலே தோன்றுவாராயினர். இவர்களுள்ளே காலத்தானும் பெருமையானும் முற்பட்டு விளங்குபவர் சிதம்பர ரேவணசித்தர் ஆவர். இவர் உபகரித்த நிகண்டு கி. பி. 1594-ல் இயற்றப்பெற்றதென அதன் பாயிரத்தால் அறியக்கிடக்கின்றது. இந்திய தேசசரித்திரத்தில் 16-ம் நூற்றாண்டினிறுதி மேனாட்டார் வரவுக்காலமாய்ச் சரித்திரகதியையும் நாகரிகப்போக்கினையும் மாற்றிப் பலவகை யுறுதிநலங்களையும் விளைத்தற்குரிய அங்குரார்ப்பணகாலமாய் அமைந்துநின்றதுபோலவே, தமிழ்மொழிச் சரித்திரத்தின்கண்ணும் அஃது அத்துணைச் சிறப்புடையதாயமைந்திருப்பது உய்த்துணரத்தக்கது. இரேவணசித்தர் எழுதிய நிகண்டுநூலின்பெயர் அகராதிநிகண்டு என்பது. பெயருக்கேற்ப இந்நிகண்டு அகராதிக்கிரமத்தில் அமைந்திருக்கின்றது. தமிழ்க் கருவிநூல்களுள் இந்நிகண்டுதான் முதன்முதலாக இவ்வாறு அமைந்துள்ளது. எளிதிலே நோக்கியுணர்தற்குற்ற இம்முறை 11-ம் நிகண்

அகராதி நிகண்டு.

* 'முத் தமிழ்வலோர் செப்புமிப் பெயராகுமே,' 'முத் தமிழோர்கள் செப்புமிப் பெயராகுமே' என்று மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரதிகளிற் காணப்படுகிறது.



டின் விருத்தியம்சமேயென்பது தெளிவாம். இம் முறையைத் தமிழிற் கொணர்ந்ததனாலும் யாவராலும் போற்றத்தகும் ஓர் அரிய செயலாம். இதன்மேலும் அகராதியென்று தற்காலத்திற் பிரசித்தமாய்வழங்கும் பெயரினை முதன்முதல் ஆக்குவித்து ஆட்சியிற்கொணர்ந்த பெருமையும் இரேவணசித்தர்க்கே உரியது. அகராதி என்ற புதுச்சொல்லினையும் நிகண்டு என்ற பழஞ்சொல்லினையும் ஒன்றாக இயைத்து அருசி தோன்றாவண்ணம் அமைத்த நயமும் பாராட்டத்தக்கது. வடமொழியில் 'அகராதிநிகண்டு' என்னும் நூலொன்று உளதாகப் பெயர்மாத்திரையிற் கேட்கப்படுகின்றது. இதன் காலம் முதலிய விவரங்களொன்றும் அறிதற்கில்லை. தமிழில் இயன்ற இந்நிகண்டுநூல் முதன்முதல் பல வருடங்கட்குமுன் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்ததாகும். பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் 1921-ல் வெளியிடப்பட்டது. இரண்டு பதிப்பிலும் திருத்தமடையாத இடங்கள் பலவுள்ளன.

நூல் இயன்றுள்ள முறையை,

"...............அகர முதலாய்
மதித்தெழு வகார வர்க்க மீறாய்
மொழிமுத லெழுத்து நாற் றொருநா லடைவே
மொழிதரு சூத்திர முதற்பதந் தோறும்
வருபெய ராதிப் பொருளா யெடுத்தே
ஒருபெயர் முதனாற் பத்தா றீறாய்
நிகழ்தர வுரைக்குந் தொகைதனக்கு"

என்று வரும் பாயிரத்தால் அறியலாகும்.

அகராதிமுறை யென்றுகூறியவளவிற் பொருள்விளக்குதற் கெடுத்துக்கொண்ட சொற்கள் யாவும் தற்காலத்துள்ள அகராதியிற் காணும் கிரமத்தை முற்றுங் கைக்கொண்டு நூல் அமைந்துள்ளதென்று எண்ணுதல் தவறு. சொற்களின் முதலெழுத்துக்கள்மாத்திரம் அங்ஙனம் அமைந்தனவேயன்றி இரண்டாமெழுத்து முதலியன அந்நியமத்திற் குட்பட்டுவந்தனவல்ல. அன்றியும், அகாவர்க்கப்பெயர்கள் முதலியன அம்முதலொருபெயர், அம்முதலிருபெயர், அம்முதன்மூப்பெயர் : என்றிங்ஙனமாக வகுக்கப்பெற்று நூல் முடிகின்றது.

நிகண்டுப் பொருள்களைப் பன்னிரு தொகுதிகளாக வகுத்துத் திவாகரரும் மண்டலபுருடரும் பிரசாரத்திற்குக்கொணர்ந்த முறையை விடுத்துப் பிங்கலந்தையிலுள்ள முறையை மேற்கொண்டு சிறந்த கருவி நூலாக விளங்குவது 'கைலாசநிகண்டு சூளாமணி' யென்பதாம்.

**கைலாச நிகண்டு.** இதன் பிரதியொன்று தொன்னூற் கருவூலமென்று சொல்லத்தகும் திருமேனி இரத்தினகவிராயர்பரம்பரையினர் வீட்டிலிருந்து கிடைத்தது. இதனை இயற்றியோர் வரலாறுங் காலமும் சிறிதும் அறியக்கூடவில்லை. நூற்பெயரை நோக்கும்போது மண்டலபுருடரியற்றிய நிகண்டுசூடாமணிக்குப் பிற்பட்டதாயிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. 'கைலாச' என்ற அடைமொழியால் இதனை இயற்றியவர் சைவரென்பதும் 'கைலாசம்' என்ற பெயரினரென்பதும் ஊகித்தல்கூடும். ஏட்டுப்பிரதியின் நிலைமையினின்று அதனை எழுதிமுற்றியது சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பாக இருக்கலாமென்று கொள்ளலாம். சுமார் 300 வருடங்கட்கு முன்னர் இந்நிகண்டு இயற்றப்பட்டிருக்கலாமென்று கொள்ளுதல் உண்மையினின்றும் இழுக்காது.

இது பிங்கலந்தையின் வழிப்பட்டதென்பது விண்ணவர்வகை, விண்ணின்வகை, மண்ணின்வகை யெனத்தொடங்கிச் சென்று ஊர்வன இறுதியாக வரும் 49 பகுப்புக்களாலும், இறுதியில் ஒருசொற்பல் பொருட்பெயர்களை வைத்திருக்கும் முறைமையாலும் அறியப்படும். ஆனால் இறுதிப்பகுதி பிங்கலந்தையின்முறையைத் தழுவியதன்று; ஓரெழுத்தொருமொழி, ஓரெழுத்தொற்றொருமொழி, ஈரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொற்றொருமொழி, மூவெழுத்தொருமொழி, மூவெழுத்தொற்றொருமொழி, நாலெழுத்தொற்றொருமொழி என்ற ஏழு பகுப்புக்களையுடையதாய்க் காணப்படுகின்றது. ஓரெழுத்தொருமொழியிற் றவிரப் பிறபகுப்புக்களில், அகராதிமுறை காணப்படவில்லை சூத்திரங்களும் பிங்கலந்தைச்சூத்திரங்களை அடியொற்றியேயுள்ளன. உதாரணமாக, அடியில்வரும் ஓரெழுத்தொற்றொருமொழிச் சூத்திரங்களைக் காண்க:

27. ஓரிடைச் சொல்லு முரைக்குங் காலமும்
பேசில் வறிதும் பெருமையுங் கோன்னே
அச்சமு மாங்கதற் காகு மென்ப.



28. காற்றும் வழியுங் காலும் பொழுதும்
கூற்றும் அளவையும் குவிதே ருருளையும்
காய்புந் தறியுங் கண்ணெ னுருபும்
வான்கொடிப் படரு மாமும் புதல்வரும்
சரிபுன லோடைத் தாழ்ந்த வதியும்
உரியதோ ரிலக்கமு முரைக்குங் காலே.

29. அருக்கன் முதலா வாய்ந்த வொன்பதும்
வலியுங் கொள்கையும் வல்லிடை யூறும்
கொலையும் பிசினமுங் கோளெனத் தகுமே.

இப்பகுதி யமைந்துள்ள முறை பயன்றருவதன்றெனல் வெளிப்படை.

இந்நூல்தோன்றி ஒருநூற்றாண்டிற்குப்பின்னர், மிகவும் எளிதான முறையொன்றைக்கைப்பற்றிப் பல்பொருட்சூளாமணி யென்றநிகண்டு நூலொன்று இயற்றப்பட்டது.

**பல்பொருட் சூளாமணி நிகண்டு.** இதன் ஆசிரியர் 'மடவை' என்றவூரினரும், சிதம்பரபாரதி என்றவரின் புத்திரருமாகிய ஈசுரபாரதியாவர். 'மடவை' என்பது ஸ்ரீவில்லிபுத்தூரையடுத்துள்ள மடவார்வளாகமென்ற வூராக இருக்கலாமென்றுதோன்றுகிறது. இவர் நூல்செய்தகாலம் கி. பி. 1700. இவ் விவரங்கள்,

"கொல்லமெண் ணூற் றெழுபத்தா றெனக்கணிதப் பாவாணர்
குறித்த வாண்டின்
மல்குபுகழ் விக்கிரம வருடத்தா வணிமூல
வளஞ்சேர் நாளில்
நெல்லைநகர் வடிவுவந்த வேய்முத்தைப் பணிந்துலகி
னெடுநா ணிற்கப்
பல்பொருட்சூ ளாமணியை யீசுரபா ரதிதமிழாற்
பாடி னானே"

"சிதம்பரபா ரதிபாலன் புகழ்மடவை யுடையவளாந் தேவி செம்பொற்
பதம்பணிசெங் கைத்தலத்தா னீசுரபா ரதியெனுநூற் பாவ லோனே"

என்ற பாயிரச்செய்யுட்களால் உணரலாகும். அமரகோசமென்னும் வடநூலைப் பின்பற்றி இவரும் தமது நூலை மூன்றுகாண்டங்களாகப்

பகுத்து முதற்காண்டம் ஒருசொல் லொருபெயர்த்தொகுதியாகவும், இரண்டாங்காண்டம் ஒருசொற் பல்பொருட் டொகுதியாகவும், மூன்றாங் காண்டம் பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த்தொகுதியாகவும் அமைத்திருக்கின்றனர். இது,

"தோன்றுகாண் டச்சடையான் றொல்சீர்சேர் நாமநூன்
மூன்றுகாண் டத்தான் மொழிகின்றேன்—ஆன்ற
குமாரசிங்கத் தின்கருணை கொண்டிவட நூல்சேர்
அமரசிங்கத் தின்சிறப்பி னால்."

"நாவுவந்த பல்பொருட்சூ ளாமணியைப் பாரில்
நாட்டியசீர் முதற்காண்ட மென்னும்பேர்தான்
பூவுவந்த வொருபெயரோர் பொருளே யாகும்
போற்றிரண்டாங் காண்டம்பல் பொருளி னோர்சொல்
சேவுவந்த செல்வேவிப் பெருமா னீன்ற
செவ்வேளின் றிருவருளாற் றேர்ந்து நான்சொல்
பாவுவந்த பெயர்மூன்றாங் காண்ட மாகும்
பலபெயர்க்கூட் டத்தொருபேர் பலவுந் தானே."

என்ற செய்யுட்களால் உணரலாகும் முதலிரண்டுகாண்டங்களும் அகராதிமுறையிலேயே அமைந்துள்ளன; மூன்றாங்காண்டமும் அவ்வாறே அமைந்திருத்தல்வேண்டும். உரிமையிற்சிறந்த நண்பர் திருவாளர் எம். பி. எஸ். துரைசாமிமுதலியாரவர்கள் ஆழ்வார்குறிச்சியில் தங்கள்வீட்டிலிருந்த இந்நூற்பிரதியை மிக்க அன்போடு உதவினார்கள். இப்பிரதி இறுதியிற் குறைவுடையதாயிருத்தல் வருந்தத்தக்கது.

இந்நூல் தோன்றி 32 வருடங்கட்குப் பின்னர் மேனாட்டுப் புலவரான வீரமாமுனிவர் சதுரகராதி இயற்றினார். இதன்கண்ணுள்ள முதன்மூன்று அகராதிகளும் பல்பொருட்சூளாமணியின் மூன்றுகாண்டங்களையும் ஒருவாறு ஒத்திருத்தல் நோக்கத்தக்கது.

**சதுரகராதி.** இவ்வகராதி, இயற்றப்பெற்ற சிலவருடங்களுக்குள்ளே மிகவும் பிரபலமெய்திற்று. தமிழ்நாட்டில் தமிழ்வித்வான்கள் வீடுகளிலெல்லாம் இதன் ஏட்டுப்பிரதிகள் காணப்படுகின்றன. தமிழகராதியின் சரிதத்தில் இந்நூல் ஒரு முக்கியஸ்தானம்பெற்றுவிளங்குகின்றதென்றுமட்டுங்கூறி அமைகின்றேன்.



சதுரகராதி மிக்க உபயோகமுள்ள கருவிநூலாயமைந்தாலும், தமிழறிஞர்கள் அதன்பெருமையை முற்றவுணர்ந்து போற்றிவந்தார்களென்று கூறமுடியவில்லை. தமிழாசிரியர்கள் நிகண்டுகற்றலையே பெரிதும் மேற்கொண்டுவந்தார்கள். ஆதலால் அகராதிமுறையையும் அதில் அடங்குதற்குரிய பலபகுதிகளையும் செம்மைசெய்தலில் அவர்களுடைய முயற்சிசெல்லவில்லை. மீண்டும் நிகண்டுகளை அகராதிக்கிரமத்தில் இயற்றுதலிலேயே மனமூன்றிநின்றார்கள்.

**பொதிகை நிகண்டு.** இதற்குச் சான்றாக, சதுரகராதி வெளிவந்து சுமார் 40 அல்லது 50 வருடங்கட்குப்பின்னர்த் தோன்றிய *பொதிகைநிகண்டினைக் கூறலாம். இந்நிகண்டின் பிரதியொன்று நண்பர் திருவாளர் C. R. நமச்சிவாயமுதலியாரவர்கள் அன்புடன் உதவினார்கள். இதனை இயற்றிய ஆசிரியர் கல்லிடைக்குறிச்சியினரான சாமிகவிராயராவர். இவர் 'நாமதீப நிகண்டு' இயற்றிய சிவசுப்பிரமணியக்கவிராயரின் தந்தையாரென்பது,

"எந்தை பொதிகைநிகண் டென்றோர் சொற் பல்பெயரே
தந்தனன் காண்"

[*வேதகிரிமுதலியார் தமது இலக்கியக்களஞ்சியத்துள் 'பொதியநிகண்டு' என வொரு நூலைக்கூறி அதினின்றும் பின்வருஞ்செய்யுளைக் காட்டுவர்:

'தட்டுநீட் டுக்குற றணைவிலின் முருகல் தன்மனைட குறைதலில் லாமை
கொட்டு கடின மின்மையா னிக்குக் கூறுமாற் றறிவித்தல் சோதி
விட்டுவிட் டொளிர்தல் மிகுபடத் திருத்தல் வெவ்வழல் வென்றியைக் கொள்ளல்
கட்டிசாய்த் திடுதிற் பன்னக்கொண் டதிக கனக்கொளல் கனகலக் கணமே.'

பொதிகைநிகண்டு நூற்பாக்களால் அமைந்திருத்தலின், இந்நிகண்டு பிறிதொருநூலாயிருத்தல்வேண்டும். கனகலக்கண முதலிய பொருள்களும் பொதிகைநிகண்டுகைக்கொண்டுள்ள முறையில் வரத்தக்கனவல்ல. இங்ஙனமே ஒளவைநிகண்டு என வொன்றைக்கூறி அதினின்றும் கீழ்வருஞ்செய்யுளைக் காட்டுவர்:—

பதினறுவகை வாசப்பொருள்.

"அலர்நக் கோலஞ் சூட விலவங்கஞ் சாம்பி ராணி
காலஞ்செல் லதில்சந் தொங்கு கத்தூரி புழுகு மெனவவ்
கோலமார் மருக்கொ ழுந்து (வெட்டி)குங்கும மிலாமிச் சம்வேர்
சாலுஞ்சண் பகஞ்சவ் வாது சாற்றுஞ்சோ டசவா சப்பே"]

என்று அந்நூலிற் பயின்றுவரும் பாயிரவடிகளால் அறியலாகும். அகராதிநிகண்டு முதலியவற்றைக்காட்டிலும் ஒருசில அம்சங்களில் இந்நிகண்டு செம்மையெய்தியது. இவ்வகைநூல்களிற் பல்பொருட் சூளாமணியிலுள்ளதுபோல் ஒருசொல்லொருபொருள், பல்பொருளொருசொல் முதலிய பாகுபாடுகளும், அகராதிநிகண்டிலுள்ளதுபோல் அம்முதலொருபெயர், அம்முதலிருபெயர் முதலிய பாகுபாடுகளும் வேண்டாதனவாம். இப்பாகுபாடுகள் இந்நிகண்டில் அறவேயொழிக்கப் பட்டன. அன்றியும் அகராதிநிகண்டு முதலியன மொழிமுதலெழுத்தின்முறையைக் கவனித்தனவேயன்றி இரண்டாவதெழுத்து முதலியவற்றின்முறையைச் சிறிதுங் கவனித்தில. உதாரணமாகப் பின்வருவனவற்றைக் காண்க.

1. அரனென் பதுவே சங்கர னாகும்.
2. அம்பிகை யென்ப துமையவள் பெயரே.
3. அயனை வேத னுமென நுவல்வர்.

இவை அகராதிநிகண்டின் முதல் மூன்று சூத்திரங்களாம். பொதிகைநிகண்டிலே மொழிமுதலெழுத்தின்கிரமம் அனுசரிக்கப் பெற்றிருப்பதோடு, இரண்டாமெழுத்துக்களும் ஒரே மெய் அல்லது உயிர்மெய்யெழுத்தின் சார்பினவாயிருக்கவேண்டுமென்றநியதி கையாளப் பெற்றிருக்கின்றது. உதாரணமாக,

1. அகந்தருவுங் குறையும் வெற்பு மனையும்
அகழு முள்ளு மரன்மாவு மகப்பொருளும்
இடமும் பாவமு மல்லவு மாகும்.

2. அகைத்த லறுத்திடலு மொடித்தலு மீர்தலும்
வேதனை யும்மென விளம்பினர் புலவர்.

3. அகப்பா வுண்மதில் மேடையு மதிலும்.

என்று வரும் முதன்மூன்று சூத்திரங்களை நோக்குக. இவ்வாறாக, நிகண்டுநூலினை அகராதியோடு ஒத்தநிலையிற் கொண்டுவருதற்கு வேண்டும் செயற்பாடுகளெல்லாம் கடைபோக முடிந்தன.

அகராதிநிகண்டின்மரபிலே வந்த இந்நூல்கள் அங்ஙனமே பயிலப் பெற்றனவாகத் தெரிகின்றதேயன்றிப் புலவர்குழாத்துட் பெரிதும் போற்றப்பெற்றனவாகத் தெரியவில்லை. அகராதிநிகண்டின் ஏட்டுப்பிரதிகள் தமிழ்நாட்டிற் சென்னை முதல் நெல்லையீறாகப் பல விடங்களிலும் காணப்படுகின்றன. இதனால் இந்நூல் மிக்க பிரசாரமெய்தியிருந்ததென்பது விளங்கும். எனினும் மண்டல புருடர் ஏற்றிய சூடாமணி யென்னும் வாடாத நிகண்டு விளக்கின்முன் இரேவணசித்தர் முதலியோர் இயற்றிய நூல்கள் ஒளியின்றி மங்கிப்போயினவென்றே கூறவேண்டும். தமிழ் கற்பாரிடையே சூடாமணியிற் பதினொராந்தொகுதியளவு வேறு எவ்வகைநிகண்டும் ஆதரிக்கப்படவில்லையென்பது திண்ணம். தமிழ் மக்கள் தங்கள் முன்னோர்முறையைக் கைவிட்டு ஆங்கிலமுறையிற் கல்விபயிலத்தொடங்கியகாலம்வரை இந் நிகண்டே ஓதிவரப்பெற்றதாகும். இத்துணையாகப் போற்றப்பெறுதற்கு ஒரு முக்கியகாரணம் அனுகூலியாயிருந்திருக்கலாமென்று தோன்றுகிறது. அகராதிநிகண்டு முதலியன நூற்பாவாயின்று பாந்துகிடத்தலினாலே மனனம் பண்ணுதற்கு எளியவல்ல. மனனம்பண்ணி ஞாபகத்திற் சேமித்து வைத்தலே நன்றெனக்கொண்ட நம்முன்னோர்க்குச் சூடாமணிநிகண்டு போன்றனவே நல்ல கருவிநூலாகப் புலப்பட்டன. திவாகரம், பிங்கலம் முதலியன புலவர்பெருமக்களாலன்றிச் சாமானியராற் போற்றப் பெறாமைக்கு இதுவும் ஒருகாரணம். ஆகவே அகராதிநிகண்டின் மரபில் நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கும்பொழுதே சூடாமணியிற் பதினொராந்தொகுதியின்மரபிலும் நூல்கள் தோன்றிக்கொண்டிருந்தன. இவ்வகையிலே இயற்றப்பெற்ற நூல்களுள், காலத்தால் மிக முந்தியது அரும்பொருள்விளக்கநிகண்டு. அதன் சிறப்பியல்புகளைக் குறித்துப் பின்னர்க் கூறுவோம்.



அரும்பொருள் விளக்கநிகண்டு

இந்நூல் தோன்றிச் சுமார் ஒரு நூற்றாண்டுக்குப்பின், அஃதாவது சுமார் கி. பி. 1850-ல் பதினொராந்தொகுதியின் நெறியையே பின்பற்றி நாநார்த்ததீபிகை என்ற ஓரியநூல் இயற்றப்பெற்றது. இந் நிகண்டு வடமொழிச்சொற்களைப் பெரிதும் மேற்கொண்டுள்ளது. தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் உள்ள தொடர்பு அநாதி; இத்தொடர்பு காலநதியை யொட்டிப் பலவகையாலும் விரிந்துகொண்டே வந்திருக்கிறது. தமிழிற் புலமைமிக்க பெருமக்களனைவரும் வடமொழியையும்

நன்கு பயின்றிருந்தனர். பாரம்பரைத் தமிழ்ப்புலவர்கள் இல்லங்களில் வடமொழி நூற்பிரதிகளும் காணப்படுதல் இதற்குத் தக்கசான்றெனக் கூறலாம். கல்வியறிவு மிக்கில்லாத தமிழ்மக்களும் வடமொழிப்பதங்களை மிகுதியாகக் கையாளத் தொடங்கினர். வில்லிபுத்தூராழ்வார் போன்ற புலவர்களும் வடமொழியைப் பெரிதுங் கலந்து நூலியற்றிவந்தனர். தர்க்கம், ஜோதிஷம் முதலிய சாஸ்திரப் பயிற்சிக்கும் வடமொழியுணர்ச்சி அத்தியாவசியமாயிருந்தது. இக் காரணங்களால் வடமொழிப்பதங்களின் பொருளுணர்ச்சியும் இன்றியமையாததாமென்பதை யுணர்ந்து அப்பதங்களை மிகுதியாகச் சேர்த்துச் சுமார் 1100 விருத்தங்களால் அமைத்த பெருநூலாகும் இந்த நாநார்த்ததீபிகை. இதன்கட் பயின்றுள்ள வடசொற்களிற் பல வடநூல்களினும் அருகியே வருவனவாம். அடைமொழி புணராது பொருள்களைப் படித்திருப்பது இந்நூலின் பிறிதொரு நயமாம். இதனை இயற்றியவர் இப்பொழுது சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ் ரீடராயிருக்கும் திருவாளர் அநவரதவிநாயகம்பிள்ளையவர்களின் பிதாமகராகிய முத்துசாமிப்பிள்ளையவர்களாவர். நண்பர் அநவரதவிநாயகம்பிள்ளையவர்களின் அன்பினால் இந்நூல்முழுமையும் யான் பார்க்கநேரிட்டது.

நாநார்த்த தீபிகை

நாநார்த்த தீபிகை தோன்றிச் சுமார் 25 வருடங்கட்குப்பின்னர், 1874-ல், யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கம்பிள்ளை யென்பவர் சிந்தாமணி நிகண்டு எனப்பெயரிய நூலொன்று இயற்றி அச்சிடுவித்தனர். இதுவும் பதினொராந் தொகுதிமுறையில், தீபிகையைப்போல் வடமொழிச்சொற்களை மிகுதியாய்ச்சேர்த்து அமைத்த சிறியதொரு நூலாம்.

சிந்தாமணி நிகண்டு.

“சேர்செறி இளைஞ ரோர்சொற் கொருபொரு ளோரா யோரப்
பார்செறி நிகண்டு சிந்தா மணியெனப் பகர்வ னென்றே”

என்று ஆசிரியர் கூறுதலால் இஃது ஒருசொல் லொருபொருள் கூறும் நூலென்றறியலாம். இது 400 விருத்தங்களாலாயது. ஆசிரியர் தாமே ஓர் உரையும் வகுத்திருக்கின்றனர்.

இற்றைக்குச் சுமார் 12 வருடங்கட்குமுன்னர், வீரராகவபுரத்திற் பிரபலவக்கீலாயிருந்த திருவாளர் பூமிநாதமுதலியாரவர்களின் தந்தையா



ரும், வீரவநல்லூர் வாசியுமாகிய நா. அருணாசலநாவலரவர்கள் பதினோராவது ‘விரிவுநிகண்டு’ எனப் பெயரிய நூலொன்று விருத்தப்பாவால் இயற்றி உரையும் வகுத்திருக்கின்றார்கள். குறித்த நாவலரவர்கள் காலஞ்சென்று இப்பொழுது சுமார் 25 வருடங்கள் இருக்கலாம். இந்நூற்பிரதி, திருநெல்வேலிவக்கீல் திருவாளர். வி. எஸ். சங்கரசுப்பிரமணியமுதலியாரவர்களால் அன்புடன் உதவப்பட்டது. விரிவுநிகண்டு சூடாமணிநிகண்டினை யாதாரமாகக் கொண்டு அதன்முறையையே பின்பற்றிப் பல வழக்குச்சொற்களும் பொருள்களும் கூட்டப்பெற்றுத் தன் பெயருக்கேற்ப மிக விரிவாக அமைந்துள்ளது. இது பின்வரும் காப்புச்செய்யுளால் அறியலாம்:

விரிவு நிகண்டு.

‘பொங்கொளி வீரை வேணிப் பூமிநா தன்றனு ருசன்
முன்புறு நிகண்டோ டேனை முதுமொழிப் பொருள னேகம்
இன்புற மெதுகையாக வியற்றுமிந் நிகண்டை மேலோர்
அன்பமை கருத்துட் கொள்ள வருள்செ யைங்கரமா தேவே’

நூலின் இறுதிப்பகுதி பலவாறாகச் சிதைந்து காணப்படுதலினாலே செய்யுட்டொகை நிச்சயிக்கக்கூடவில்லை. தெளிவாக அறிவது 1036 செய்யுட்கள்; பல செய்யுட்கள் எண்ணிடப்பெறாதுள்ளன. ஆகவே, 1100 செய்யுட்கு மேற்பட இந்நூலில் உள்ளனவென்று கொள்ளலாம். வழக்குச்சொற்கள் புக்கு இது மிக விரிந்த நூலாதலைக் கீழ்வருஞ் செய்யுட்களால் அறிக:

‘அகமிடம் பாம்பு தானி யம்புவி பள்ள முள்ளோ
டகலியப் பொதுவே தண்ட மாகாய மாழ மான்மா
பகலனே யுருபு துக்கம் பாவமுள் ளிடமோர் தாரு
தகுதியில் குணம்வீ டோடு சாருபந் திரவம் நெஞ்சாம்.

‘கம்மலை யிரும லோர்வ கைக்கடுக் கன்கா தோலை
பம்மல்மா சோடு மங்கல் குரலடைப் பெனபர் பாரோர்
பம்மல்மந் திப்பு மூடல் பொருத்திக்கட் டுகைமந் தாரஞ்
செம்முத லைம்பே ரென்பர் சிமாட்டி தலைவி செல்வி.’

திருநெல்வேலிப் பிரதேசத்துள்ள வழக்குச்சொற்கள் இதன்கண் மிகுதியாயுள்ளமை இந்நூலின் சிறப்புக்களுள் ஒன்றாம்,

இதுகாறுங் கூறிய ஒருசொற் பலபொருள் நிகண்டுகளிலே சொற்களும் செய்யுட்டொகையும் வரவரப் பெருகிக்கொண்டே போவது உய்த்துணரத்தக்கது. சூடாமணிநிகண்டிற் பதினோராந்தொகுதியில் 310 செய்யுட்கள் தரப்பட்டுள்ளன. வேதகிரிமுதலியாருடைய நூதன சூடாமணியில் 583 செய்யுட்கள் இருக்கின்றன. அரும்பொருள் விளக்கநிகண்டினை நோக்கினால் ஒரு பிரதியில் 700 செய்யுட்களும் பிறிதொரு பிரதியில் 740 செய்யுட்களும் உள்ளன. நாநார்த்ததீபிகையில் 1100 செய்யுட்கள் காணப்படுகின்றன. விரிவுநிகண்டின்கண்ணும் இவ்வெண்ணிற்கு மேலாகவே செய்யுட்கள் உள்ளன. இவ்விரிவிற்குக் காரணம் யாது? மேனாடுகளிலே சமீபத்திலே நிகழ்ந்த கோரயுத்தத்தின்பயனாக நூற்றுக்கணக்கான புதிய சொற்கள் அந்நாட்டு மொழிகளிற் புகுந்தனவென் றறிகின்றோம். பிறமொழி பேசும் மக்களோடு பல்வேறு காரணங்களால் நெருங்கி யூடாடுவதனாலும், புதிய சொற்கள் மீளாக்கடனாக வாங்கப்பெற்று அம்மொழிகளில் வழங்குகின்றன. பிரகிருதிதத்துவ ஆராய்ச்சி நாடோறும் பெருகப் பெருக ஆயிரக்கணக்கான சொற்கள் ஆங்கில முதலிய மொழிகளிற் புகுந்து நிலவுவதும் கண்கூடே. பிரகிருதியை மேன்மேலும் வெற்றிகொள்ளுவதாலும் நூதன யந்திரங்கள் மேன்மேலும் இயற்றுவதாலும் பொதுஜனங்களின் அனுபவம் முதிர, அதன்வாயிலாக அம்மொழிகளிற் புகுந்து பயிலுஞ் சொற்கள் வரம்பிறந்துள்ளன. ஒருமொழியைப் பேசும் மக்களது அறிவும் அனுபவமும் நாகரிகமும் வியாபகத்தன்மையும் பெருகப்பெருக, அம்மொழியிலுள்ள சொற்களும் பெருகிக்கொண்டே செல்வனவாம். இவ்வகையான காரணங்களாலே சூடாமணிக்குப்பின் சொற்கள் பெருகியதெனக் கூறமுடியவில்லை. இந்நிகண்டின்காலமாகிய 16-ம் நூற்றண்டின் ஆரம்பத்திலிருந்து அரசியல்மாறுபாடுகள் பற்பல ஏற்பட்டன வென்பது உண்மையே. பிறமொழி பேசும் மக்களோடு தமிழ்மக்கள் ஊடாடிவந்தனரென்பதும் மெய்யே. எனினும், இவற்றால் நிகண்டுகளுட் புகுந்த சொற்கள் மிகச் சிலவேயாகும். தமிழ்மக்களில் ஒருசிலரை வரம்புகடந்து ஆட்டிவந்த வடமொழிப்பேராசையே இம்மொழிப்பெருக்கிற்கு முக்கிய காரணமென்று தோன்றுகிறது. தமிழில் நூல்வழக்கிலும் உலகவழக்கிலும் புகுந்து தமிழ்மயமாய் மாறிவிட்ட வடசொற்கள் இந்நிகண்டு

நிகண்டுகளிற் சொற்கள் பல்கிய காரணமும் முறையும்



களில் இடம்பெறுதல் அத்தியாவசியகமே. இவையேயன்றி இருவகை வழக்கிலும் பயிலாத சொற்களும் வடமொழியிற்றானும் மிக அருகியே வரக்கூடும் மொழிகளும் இவற்றிற் காணப்படுகின்றன. அனுபவ வாயிலாக வந்த சொற்கள் ஒரு மொழியில் நிலைபெறுவனவேயன்றி, மேற்கூறியவாறு புகுத்தப்பெற்ற கடன்சொற்கள் வழக்கிற் புகுதல் தானும் அரிதாம். கீழ்வரும் உதாரணங்களைக் காண்க:

"பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்
பகலோ னொருமூ கூர்த்தம் பகலவ னடுவே தேசு
மகாமே சுரூப் பூந்தாதாம் வசிகூர்மை வசியம் வாளே
அகமன மனையே பாவ மகலிட முள்ளு மாமே"

இது சூடாமணியிற் ககரவெதுகைச் செய்யுள். இதன்கண் வடமொழிப் பதங்களும் தமிழ்ப் பதங்களும் விரவி வந்துள்ளமை காணலாம். கூறப்பெற்ற வடசொற்கள் யாவுந் தமிழ்நூல்வழக்கிற் சாதாரணமாய்க் காணக்கூடுஞ் சொற்களேயாம்.

"நீபமே கடைய பற்சொ ளுளும்நீர்க் கடம்பு மாகும்;
சாபமே யங்க தச்சொற் றனுவரை யாடே முப்பேர்;
கோபமே சீற்ற மீதல் குறிக்குமிந் திரகோ பப்பேர்
யூபமே வேள்வித் தம்ப முழூபடை வகுப்பே மட்டை"

இஃது அரும்பொருள்விளக்கநிகண்டினுள் பகரவெதுகைச் செய்யுள். இதன்கண் வந்துள்ள எதுகைச்சொற்கள் முழுவதும் வடமொழிச்சொற்களே. எனினும் இவை நூல்வழக்கிலும் உலகவழக்கிலும் பயின்றுவருவனவேயாம்.

"சூநிர்த மினியமெய்ச் சொல்லு மங்களம்
பேகில மிலந்தைக்காய் வகுமுருக் கைப்பேர்
தேறுகை யிளங்கற்று மாதங் கப்பிடி
சூனைகர் தனியண்ணம் வதைக்குஞ் சூழலே".

இது நாநார்த்ததீபிகைச்செய்யுள்; நகரவெதுகையைச் சார்ந்தது. இதன்கண் வந்துள்ளன அனைத்தும் வடமொழிச்சொற்களாம். ஆனால் இவை தமிழில் நூல்வழக்கில் இதுவரை பயின்றறியாதன; ஒருசில வடமொழி நூல்களினும் மிக அருகியே காணப்படுவன.

ஒருசொற் பல்பொருளைக்கூறும் இந்நிகண்டுகளிற் சொற்களும் பொருள்களும் பெருகி அதிகரிக்கும் முறை கூர்ந்துநோக்குதற்குரியது. ஒருமொழிக்கே தனித்துரிய சொற்களுக்குப் பலபொருளிருத்தல் அசம்பாவிதமன்று; பொருள்கள் குறைதலும் பலவாதலும் நெருங்கிய ஆட்சித்தொடர்புபற்றியேயாம். உதாரணமாக, 'அகழ்' என்ற சொல்லை எடுத்துக்கொள்க. இதன்பொருளை 'அகழெனப அகழி தொட்டல்' என்று அரும்பொருள்விளக்கம் விரிக்கின்றது. தோண்டுதல் (தொட்டல்) என்ற வினையைபுணர்த்துஞ்சொல்லாய்த் தோன்றிப் பின்னர்த் தோண்டப்பெற்ற அகழ்க்கிடங்கையும் ஆட்சிமுறையான் உணர்த்திற்று. இக்காலத்தில் 'தோண்டுதல்' என்றபொருளில் உலகவழக்காற்று, அகழ்க்கிடங்கு ஒன்றனையே அஃது உணர்த்துகின்றது. இச்சொல் பொருட்கேடுற்றது. இதற்கு மாறாக, ஆட்சிமுறைபற்றிப் பொருள்கள் விரிந்து பலவாகி நிற்குஞ் சொற்களும் மிகப் பலவாகவே இருத்தல் வேண்டும். இவற்றிற்குமேலாகப் பிறிதொருவகையாற் பொருள்பெருகிய சொற்களும் உள. தமிழ்மக்கள் பிறமொழிமக்களோடு உறவாடிக் கலந்து பலதிறப்பட்ட வாழ்வுடையராய் மேன்மேலாக விருத்தியடைய, பிறமொழிச்சொற்கள் தமிழில் வந்து கலத்தல் இயல்பே. அவ்வாறு வந்து கலந்த சொற்களுள் வடமொழிச்சொற்கள் மிக முக்கியமானவையென்று கருதத்தக்கன. அவை செய்யுள்வழக்கில் முதன்முதலாகத் தோன்றினவென்று கொள்ளுதற்கும் தக்க ஆதாரமுளது. செய்யுளீட்டச்சொற்களை யுணர்த்துமிடத்து ஆசிரியர் தொல்காப்பியனார் 'இயற்சொற் றிரிசொல் திசைச்சொல் வடசொலென் — றனைத்தே செய்யுளீட்டச் சொல்லே' என்று கூறுகின்றார். இவ்வடசொற்களுட் பெரும்பாலன உச்சாரணபேத முதலியவற்றால் எளிதிலுணரத்தரும் பல்வேறு தனிச்சொற்களாயிருந்தபோதிலும், தமிழில்வரும்போது ஓரேவடிவுபெற்றச் சொல் ஒன்றாய்முடிந்து பொருள்கள் பலவாயமைகின்றன. உதாரணமாக 'அகம்' என்ற சொல்லை யெடுத்துக்கொள்க. இதன்பொருள் 'அகமான்மா மனையுள் ளுள்ள மகலம்வெற்புடன்பா வப்பேர்' (அரும்பொருள். 13) என விரிக்கப்படுகின்றது. 'ஆன்மா' 'உள்' 'உள்ளம்' என்ற பொருள்களை நேராகவும் இலக்கணையாகவும் உணர்த்தும் வடசொல் 'அஹம்' என்பது. வெற்பு (மலை) என்ற பொருளுக்குரிய வடசொல் 'அக:' என்பது. பாவம் என்ற பொருளுக்குரிய வடசொல் 'அகம'



என்பது. இச்சொற்களெல்லாம் தமிழில் 'அகம்' என்ற ஓரேவடிவம் தாங்கிப் பொருள்கள் பலபெற்று வழங்குகின்றன. இந்நெறியை மேற்கொண்டு தமிழ்மொழியில் வழங்கும் வடசொற்களால் பலபொருட் சொற்கள் அதிகரித்தன. பிறமொழிச்சொற்களும் இவ்வகையில் உதவியிருக்குமென்றே தோன்றுகிறது. வடமொழிச்சொற்களில் உச்சாரணபேத முதலிய வேறுபாடுகளை யொழித்ததுபோலவே தமிழ்மொழிச் சொற்களிலும் சிறு வேறுபாடுகளை யொழித்துச் சொற்கிலையப் பொருள்களை விருத்திசெய்துகொண்டனர். தகுதியற்ற சிலவிடங்களிலுங்கூட இம்முறையைக் கைக்கொண்டுவிட்டனர். உதாரணமாகக் 'கேவணம்' என்ற சொல் ஆபரணங்களில் மணிகள் அழுத்துங் குழியென்று பொருள்படும். இதற்கும் 'கோவணம்' என்ற சொல்லிற்கும் உள்ள வேறுபாட்டினையழித்துக் 'கோவணம்' என்பதற்குக் 'கல்லழுத்துங்குழி' யென வொருபொருளும் அரும்பொருள்விளக்கநிகண்டிற் கூறப்பட்டிருக்கிறது. ஒருசில இடங்களில் 'கேவணம்' என்பதனைக் 'கோவணம்' என்று பாமரர் கூறும் வழக்குப்பற்றி இங்ஙனம் பொருளுரைக்கப்பட்டதெனச் சமாதானம் கூறலாம். எனினும் நிகண்டாசிரியர் சொற்பொருள்களை இருவகைவழக்குக்களையும் முற்றநோக்கி வேறுபாடுகளைநன்கறிந்து நூலியற்றவேண்டுங் கடப்பாடுடையர். இம்முறையிற் பிழைத்தமையினாலே தமிழ்நிகண்டுகளுட் புகுந்த சொல்வழுக்களும் பொருள்வழுக்களும் மிகப்பலவாம். இவ்வாறாகப் பல்வேறுகாரணங்களாற் சொற்களும் பொருள்களும் பெருகிக்கொண்டேவந்திருக்கின்றன.

அரும்பொருள் விளக்கநிகண்டு காலம் வரலாறு முதலியன.

சூடாமணிநிகண்டு 11-ம் தொகுதியின்மரபிலே வந்த நூல்களிற் காலத்தால் முந்தியது இப்போது என்னால் வெளியிடப்பெறும் அரும்பொருள்விளக்கநிகண்டென்பது முன்னரே கூறினேன். இந்நிகண்டினை யியற்றிய அருமருந்தையதேசிகர் வீரசைவமரபினர்; சிவப்பிரகாசரென்பவரின் புதல்வர்; திருச்செந்தூரில் வாழ்ந்தவர், தமது ஞானாசிரியரும் தில்லைவாசியுமாகிய பச்சைக்கந்ததேசிகருடைய ஆணையைத் தலைமேற்கொண்டு, சூடாமணிநிகண்டு, உரிச்சொல்நிகண்டு, அகராதிநிகண்டு, கயாதரநிகண்டு என்பனவற்றிலுள்ள ஒருசொற் பல்பொருட் பெயர்களைத் தொகுத்து, எதுகைமுறையி லமைத்து 700 விருத்தங்களால் இந்நூலினை யியற்றினர். இஃது அரங்கேற்றப்பெற்ற காலம் சாலிவாகன

சகம் 1685-ம் ௵, சித்திரபானு, மாசிமாசம், சிவநிசி பொருந்திய வெள்ளிக்கிழமையாகும். எனவே கி.பி. 1763-ல் இந்நூல் இயற்றி முடிந்தது.

'நூலாசிரியரைக் குறித்து வேறு யாதும் அறியக்கூடவில்லை. பச்சைக்கந்ததேசிகரைப்பற்றிய செய்திகளும் தெரிதற்கியலவில்லை. பச்சைக்கந்ததேசிகர் மடமொன்று சிதம்பரத்தின்கண் இன்றும் உள்ளது. இந்த மடத்தின் ஸ்தாபனாசாரியராகிய ஆதிப் பச்சைக்கந்த தேசிகரைக்குறித்துச் சிறியதொரு வரலாறு சித்தாந்தசிகாமணி என்னும் நூலின் முகவுரையில் அதன் பதிப்பாசிரியராகிய நாகிசெட்டியாரவர்களால் தரப்பட்டுள்ளது. அது வருமாறு :—

'இவ்வாசிரியர் கன்னடதேயத்திலே யவதரித்து, மல்லிகார்ச்சுன பர்வதத்திலே சிலகாலந் தவம்புரிந்து, சிவானுக்கிரகம் பெற்று, பின்னர்த் தென்றிசைநோக்கி வருங்கால் வழியிலே சோமேசர் கட்டமுதளிக்கவுண்டு, மலையனூரை யடைந்து, அங்கே சலத்திற் பதிந்து கிடந்த மரகதக்கடகமானது தானே வந்து தமது திருமேனியிலே பச்சையொளி பரப்பிப் பிரகாசிக்கும்படி அற்புதங்காட்டியருளி, அது கண்ட அரசனால் யானை முதலிய பல விருதுகளுந் தந்து உபசரிக்கப் பெற்று, சிதம்பரத்தை யடைந்து, தெய்வீகமுற்று விளங்கியிருந்தவர். பச்சைக்கந்தவுடையர் என்பதும் வழக்கம்'

கி.பி. 1763-ல் இருந்த பச்சைக்கந்ததேசிகருக்கு எத்தனை காலத்துக்குமுன் இம்மடம் ஸ்தாபிக்கப்பெற்றதென அறிதற்கில்லை. ஆனால் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளின் ஞானாசிரியர் *சிவஞான பாலையதேசிகர் பச்சைக்கந்ததேசிகருடைய மரபினரென்று கூறப்படுதலினாலே அவர்காலத்தில் (அஃதாவது கி.பி 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில்) இம்மடம் இருந்ததென்று தெரிகின்றது.

இந்நூலாசிரியர் ஆதாரநூல்களாகக் கொண்டவற்றுள் அகராதி நிகண்டுமொன்றென்பது கூர்ந்துணரத்தக்கது. இந்நிகண்டு இயற்றியவர் இரேவணசித்தரென்று முன்னரே விளக்கப்பட்டது. வீரசைவர்களுடைய மூலாசாரியருளொருவர் ரேவணாராத்ரியர் என்பது பிரசித்தம்.

*சிவஞானபாலையர் சித்தரென்றும் வீரசைவமரபினரல்லரென்றும் ஒரு சாரார் கூறுவர்.



எனவே அகராதிநிகண்டின் ஆசிரியர் வீரசைவராவர். சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இவர் ஒரு தலைமுறை முற்பட்டவர். வீரசைவர் பெரும்பாலுங் கன்னடதேசத் தொடர்புடையாராதலினாலே, இவர் தம் நிகண்டுள்ளே கன்னடச்சொற்கள் பலவற்றைச் சேர்த்திருக்கின்றாரென்று எண்ண இடமுண்டு. அகராதிநிகண்டினை அரும்பொருள் விளக்கநிகண்டு பலவிடங்களில் அடியொற்றிச்செல்வது காணலாம். அருமருந்தையதேசிகரும் வீரசைவராதல்பற்றி அந்நூலை விசேடித்துப் போற்றியிருப்பரென்பது கூறவேண்டா.

இவ்வாசிரியர் வாழ்ந்த இடம் திருச்செந்தூர் என்பது முன்னமே குறிக்கப்பட்டது. இந்த நகரம் வீரசைவர் மிக்கு விளங்கிய இடமாகும். சிவப்பிரகாசசுவாமிகள் இந்நகரத்திற்குச் சென்று 'நிரோட்டக யமக வந்தாதி' பாடிய வரலாறும் அது வீரசைவத்தொடர்புடையதென்பதை விளக்கும்.

இந்நூல் ஒரெதுகைவருக்கத்தில் பிறவெதுகைச்சொற்கள் கலவாதபடி இயற்றப்பெற்றதொரு நிகண்டாகும். செய்யுட்களெல்லாம் இனிய ஓசையுடன் ஒழுகுகின்றன. இதன்கண் மூவாயிரத்திருநூறு சொற்களுக்கு மேலாகப் பொருள் விளக்கப்பட்டுள்ளது.

இந்நூலைப்பதிப்பித்தற்கு இரண்டு ஏட்டுப்பிரதிகளும் ஒரு காகிதப் பிரதியும் கிடைத்தன. ஏட்டுப்பிரதிகளுள் ஒன்றும் காகிதப்பிரதியும் சென்னை அரசாங்கக் கைபெழுத்துப்புத்தகசாலையி லுள்ளன. காகிதப் பிரதி ஆண்டுள்ள ஏட்டுப்பிரதியைப் பார்த்துப் பெயர்த்தெழுதியதே யாகும். இவ்வேட்டுப்பிரதியி னிறுதியில் 'தெட்சிணாமூர்த்தி திருவடி வாழ்க. கச்சியப்பதேசிகன் திருவடி வாழ்க. சிவஞானதேசிகன் திருவடி வாழ்க. மாத்தூர் சரவணமுதலியார் குமாரன் மணியப்பன் அரும்பொருள்விளக்கநிகண்டு எழுதி நிறைந்தது. எடுத்தவன் படித்துக் கொடுக்கவேணும்' என்று காணப்படுகிறது. சிவஞானதேசிகர்

**அரும்பொருள் விளக்கத்தின் ஏட்டுப்பிரதிகள்.**

என்றது திராவிடமகாபாஷ்யகர்த்தரும் இற்றைக்குச் சுமார் 150 வருடங்கட்கு முன்னிருந்தவருமாகிய சிவஞானசுவாமிகள்தாமென்று தோன்றுகிறது. சுவாமிகளது சீடருளொருவராகிய கச்சியப்பமுனிவரே கச்சியப்பதேசிகரெனக் குறிக்கப்பெற்றவர். இம்முனிவர் கி. பி. 1790-ல் சிவபதமடைந்தாரென்பது 'வர்தநுசாலிவாகனசகாத்தமாயிரத்தெழு

சதத்தொருபத்திரண்டின்மேல்' என்று வருஞ்செய்யுளால் அறியலாகும். இவருடைய காலத்துள்ள ஒருவரால் இப்பிரதி யெழுதப்பெற்றிருத்தல் வேண்டும். எனவே இப்பிரதி தோன்றிச் சுமார் 100 வருடங்கள் ஆகியிருக்கலாம். பிரதியின் கையெழுத்துக்கள் திருந்தியவடிவி லமைந்தனவல்ல; பிழைகளும் பல காணப்படுகின்றன. இவ்வேட்டுப்பிரதியிற் காட்டினும் இதன் கடிதப்பிரதியிற் பிழைகள் மிகமிக மலிந்துள்ளன.

இவ்விரண்டுபிரதிகளைமாத்திரங்கொண்டு நூலையச்சிடுதல் தகுதியன்றெனவெண்ணி வேறு பிரதிகள் பெறுதற்குப் பல அன்பர்கள்மூலமாக முயன்றேன். சிறிதும் பயன்படவில்லை. ஒரு முறை இந்நிகண்டினைக்குறித்துத் தாக்ஷிணாத்தியகலாநிதி மகாமஹோபாத்தியாய ஸ்ரீ சாமிநாதையரவர்களிடம் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. அவர்கள் தங்களிடம் ஒருபிரதி யிருப்பதாகத் தெரிவித்தார்கள். பிறிதொருபிரதி யிருப்பது தெரிந்து மிக்க மகிழ்ச்சிகொண்டேன். ஸ்ரீ ஐயரவர்களும் தங்கள் பிரதியை மிக்க அன்போடு உதவினார்கள். இப்பிரதி மிகவும் செவ்வையானது; நன்றாகப் போற்றிவைக்கப்பெற்றதாயுள்ளது. இதன்கண் 93 இதழ்கள் உள்ளன. இதழின்பக்க மொவ்வொன்றும் நான்குசெய்யுட்களுக்குரிய எட்டுவரிகள் கொண்டன. ஏட்டுப் பலகைக்கு வெளியிற் கோத்திருக்கும் ஓலைநறுக்கில் 'முத்துக்குமாரசாமி முதலியார் அரும்பொருள்விளக்கம்' என்று காணப்படுகிறது. ஏட்டினிறுதியில் 'விரோதிகிருது௵ ஐப்பசி கஅ உயில் அரும்பொருள்விளக்கநிகண்டு எழுதி நிறைவேறியது. இஃது எழுதியது பச்சையப்பமுதலியார். பொய்கைப்பாக்கம் பச்சையப்ப வாத்தியார்' என்று எழுதப்பட்டுளது. எனவே இப்பிரதி கி. பி. 1852-ல் எழுதப்பெற்றதென விளங்குகிறது.

ஆனால் ஐயரவர்களுடையபிரதி எதிர்பாராதவிதத்திற் கலக்கமுண்டுபண்ணுவதாயிற்று. இதன்கண், அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதியிற் காட்டினும் 40 செய்யுட்கள் அதிகமாயிருந்தன. இரண்டிற்குமுள்ள வேறுபாடு இவ்வளவில் அமைந்துவிடவில்லை. மற்றை 700 செய்யுட்களுள்ளும் சில செய்யுட்கள்தவிரப் பெரும்பாலன ஒன்றிலுள்ளபடி மற்றொன்றிற் காணுதற்கரியவாயின. இந்நிகண்டின் அனுபந்த மொன்றில் ககரவெதுகைப்பகுதியை ஐயரவர்கள் ஏட்டுப்பிரதியிலுள்ளவாறு கொடுத்துள்ளேன். இதனையும் நூலின்க



ணுள்ள ககரவெதுகைச்செய்யுட்களையும் ஒப்புநோக்கி யான் கூறிய தன் உண்மை தெளியலாம்.

இவ்விரண்டனுள் எப்பிரதி ஆசிரியரியற்றிய மூலப்பிரதியோடொத்ததாயிருத்தல்கூடுமென்று நிச்சயிப்பது அவசியமாயிற்று. இதற்கு ஏட்டுப்பிரதிகளின் நிலைமையைச் சிறிது ஊன்றிநோக்குதல்வேண்டும். அரசாங்கப்பிரதியில் எழுத்துக்கள் திருந்தியவடிவில் அமைந்தனவல்லவென்று மேலே கூறினேன். அதனை யெழுதியோர் பிழையற எழுதுதற்குப் போதிய வன்மையுடையாரல்லர். எனவே இவர் தமக்குக் கிடைத்த மூலத்தை ஒருவாறாகப் பிரதிசெய்துவைத்தன ரென்றே கொள்ளற்பாலது. ஐயரவர்களுடைய பிரதி தமிழறிவு மிக்குடைய கல்வியாளரொருவரால் எழுதப்பெற்றதென அப்பிரதியைத் திறந்துபார்த்தவளவில் ஊகிக்கக்கூடியதாம். எனவே, இவர் தமது மூலப்பிரதியின் குற்றங்குறைகளை நிரப்பிச் செம்மைப்படுத்தும் ஆற்றலுடையாரவர். ஆதலால் இவ்விரண்டுபிரதிகளுள்ளும் ஐயரவர்களுடையபிரதி மூலப்பிரதியினின்றும் வேறுபட்டபிரதியாயிருக்கலாமென்று ஒருவாறு ஊகித்தல்கூடும். இவ்வூகம் பிறிதொருகாரணத்தால் வலியுறுகின்றது. ஐயரவர்கள்பிரதியில் 'சுவைநிகழ் சொல் விருத்தத் தொகை மூவொன் பானூற்றேழாய்' என நூலின் செய்யுட்டொகை அறுதியிடப்படுகின்றது. ஆனால் பிரதியின்கட் காணுஞ் செய்யுட்டொகை 740. இந்த வேறுபாடு மூலப்பிரதியைப் புதுக்க முயன்றதன்பயனாக ஏற்பட்டதெனக் கொள்ளவேண்டுமேயன்றிப் பிறிதொருகாரணத்தால் அதனை விளக்குதல் கூடாது. நூலையிங்ஙனம் புதுக்கி விரிக்கவேண்டும்நோக்கமும் காணுதற் கெளிதாகவேயுள்ளது. தமிழ்மாணவர்கட்குப் பாடங்கற்பிக்கும் ஆசிரியர்கள் தாம் அறிவுறுத்தும் ஒருசொற் பல்பொருள் நிகண்டு இயன்றவரை நிரம்பியதாயிருக்கவேண்டுமென்று கருதினர். இக்கருத்துப்பற்றியே பற்பல ஒருசொற் பல்பொருணிகண்டுகள் தோன்றின. புதுவதாக நூலியற்றுதலினும் முன்புள்ள நூலினைச் செப்பஞ்செய்தல் எளிதில் இயலுவதொன்றும். இதுபோன்றதொரு நோக்கம்பற்றியே ஐயரவர்கள்பிரதி விரித்துச் செய்யப்பெற்றதாமெனக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகின்றது. பிரதிகளிரண்டினும், ஐயரவர்கள்பிரதி காலத்தாற் பிந்தியதாதலும் எனது கருத்தை ஆதரிக்குங் காரணங்களுள் ஒன்றும். ஆகவே

இப்பிரதியைக்காட்டினும் அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி மூலத்தோடு பெரிதும் ஒத்ததாயிருக்கவேண்டுமென்பது பெறப்படுகின்றது. பிற்குறித்த பிரதியையே முக்கிய ஆதாரமாகக்கொண்டு அரும்பொருள்விளக்கநிகண்டு இப்பொழுது அச்சிபற்றி வெளியிடப்படுகின்றது.

ஆனால், இப்பதிப்பிற்கு ஐயரவர்களுடையபிரதி இன்றியமையாததாயிருந்தது. அதனைப் பயன்படுத்தியமுறையை இங்கே அறிவிக்குங் கடப்பாடுடையேன். அச்சியற்றிய நூற்கண்ணே பொருள்விளக்கஞ்செய்துள்ள சொற்களுக்கெல்லாம் ஓர் அகராதி தொகுத்தேன்.

**பதிப்பின் முறை**

இவ்வகராதியில் மூவாயிரத்து இருநூற்றுச்சொச்சம் வார்த்தைகள் உள்ளன. இச்சொற்களனைத்தும் ஐயரவர்கள்பிரதியிற் பல்வேறிடங்களிற் காணப்பட்டன. ஒவ்வொருசொல்லும் இரண்டுபிரதிகளிலும் வந்துள்ள இடங்களை ஒப்புநோக்கிப் பாடபேதங்கள் குறிக்கப்பட்டன. இதனால், பாடபேதமென்று குறிக்கப்பெற்றதனைச் சொல்லுக்குரிய பொருள் பிறிதோரிடத்திற் பிறவாறு காணப்படுகின்றதென்னுமளவில் மாத்திரமே கொள்ளவேண்டும். இங்ஙனமன்றிப் பிறவகையான் வேறுபடாத ஓரேசெய்யுட்பாடத்திற் குறித்த சொல்லினது பொருள்விளக்கும்பகுதிமாத்திரம் பாடாந்தரமாகக் காணப்படுகின்றதெனக் கொள்ளுதல் கூடாது. நூல் முழுவதினும் பாடபேதங்கள் கொடுத்திருக்கும் முறை இதுவே யென்பது நன்றாக மனங்கொள்ளுதற் குரியது. பாடபேதங்கள் இவ்வாறாக, ஒவ்வொரு தொகையிலும் அச்சிபற்றியபிரதியின்கட் காணப்பெறாத பலசொற்கள் ஐயரவர்கள்பிரதியிற் பொருள்விளக்கப்பெற்றிருந்தன. இவற்றை அவ்வவ் வெதுகையின் இறுதியிலே 'மிகை' என்று சுட்டி முறையே யெண்களிட்டுக் கொடுத்திருக்கிறேன். மிகைச்சொற்களுக்கு ஓர் அகராதியும் தனிப்படத் தரப்பட்டுள்ளது. அச்சுப்பிரதியிற் பொருள் விளக்கப்பெற்றசொற்கள் சிலவற்றிற்கு ரூபபேதங்கள் காணப்படுகின்றன. அவற்றையும் 'மிகை' அகராதியிற் சேர்த்துள்ளேன்.

மேலே குறித்துள்ளபடி ஸ்ரீ ஐயரவர்களுடையபிரதியால் இந்நூற்பதிப்பு அடைந்த திருத்தங்கள் மிகப் பல. பாடங்கள் நிச்சயப்படுத்தற்கும், ஐயங்கள் நீங்குதற்கும், பொருள்கள் விளக்கமெய்துதற்கும்



அதுவே பேருதவியாயிருந்தது. அப்பிரதி யில்லையாயின், இந்நூல் வெளிவந்திராது என்பது உண்மை. அரிதிற் பெற்றுவைத்திருக்கும் பிரதியை மிக்க தாராளசிந்தையுடன் உதவிய ஸ்ரீ ஐயரவர்களுக்கு யான் பெரிதுங் கடப்பட்டுள்ளேன்.

சென்னை அரசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையிலிருந்து யான் வேண்டும்போதெல்லாம் பிரதிகள் கொடுத்துதவிவரும் அப்புத்தகசாலையதிபரவர்களுக்கு எனது நன்றி யுரித்தாகின்றது. இந்நிகண்டினைச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிட்டுதவியவர்களும் தமிழ்ப்பரிபாலனஞ் செய்தல் தமது வாழ்நாளின் முக்கியநோக்கங்களு ளொன்றாகக்கொண்டு உழைத்துவருபவர்களும் ஆகிய பிரும்மஸ்ரீ T.C. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் நன்றிபாராட்டுங்கடப்பாடுடையது. அவர்கள்பால் எனது அன்பினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலின் இரண்டாவது அநுபந்தமாகச் சேர்க்கப்பெற்றுள்ள பலபொரு ளொருசொல் லகராதியை எழுதும்போது உடனிருந்துதவிய எனது நண்பர் ஸ்ரீமாந். P. R. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்களுடைய உதவி பெரிதும் பாராட்டத்தக்கது. இஃது அச்சாகுங் காலத்துப் பல்வகையுதவிகள் புரிந்த "செந்தமிழ்"ப் பத்திராசிரியரவர்களுக்கு எனது நன்றி யுரித்தாகின்றது.

**தமிழ் நிகண்டுகளை அச்சிட்டு வெளியிடும் முயற்சி.**

இப்போது வெளியிடப்பெறும் அரும்பொருள்விளக்க நிகண்டுதவிர, இன்னும் பலநிகண்டுகள் வெளிவரவேண்டியனவாயுள்ளன. நிகண்டுகளனைத்தையும் பயன்படுத்துத் தொகுக்கப்பெற்ற அகராதி இதுவரை வெளிவரவில்லை. பலவகையானும் நிரம்பிய பேரகராதி வெளிவருதற்குரிய பெருமுயற்சியைத் தமிழ்நாடு முழுவதும் ஒருமுகப்பட்ட வுள்ளத்துடன் மேற்கொள்ளும்படி இறைவன் அருள் புரிவாராக. நூதன ஆங்கிலப் பேரகராதியைக்குறித்துத் தமிழன்பர்கள் அறிவார்கள். இப்பெருநூல் காலகதியிற் பற்பலகோலஞ்சமைந்து சொற்செல்வி நடனஞ்செய்யும் அரங்கமாக விளங்குகின்றது. நாடோறும் புதிதுபுதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கும் சொற்களின் பிறப்பகமாகவும் திகழ்கின்றது. இவ்வகராதியின் சரிதமுழுமையும் இடைவிடாத உழைப்பினாலும் சலிப்பறியாத மனவொருமையினாலும் நிரம்பியுள்ளது. இதன்பொருட்டுத் தம்மையே தத்தஞ்செய்து முயன்றவர்தோர் ஒருவர்

இருவரல்லர். பல அறிஞர்கள் தங்களாயுட்காலத்தையும் ஆத்மசக்தியையும் இவ் வகராதியொன்றற்கே யுரிமையாக்கினர். இவ் அறிஞர்களும் ஒருதலைமுறையின ரல்லர்; அடுத்தடுத்துவந்த நான்குதலைமுறையினர் அகராதிக்கென உழைத்துவந்தனர். இங்கிலாந்துதேசத்தினர்மட்டுமன்று இன்னும் உழைத்துவந்தவர். ஆங்கிலம் பேசும் மக்களுள்ள தேசப்பகுதிகளனைத்தும் இயன்றவரை கூட்டுறவு செய்துவந்தன. இந்நூதன ஆங்கிலப் பேரகராதிபோல எவ்வகையானுங்கினும் ஒத்து நிற்கக்கூடிய அகராதிப் பொருள்கள் நமது தமிழன்னையிடத்தே உள்ளன. அவற்றை யறிந்து பயன்படுத்தும் மக்களை அவள் பெற்றிலளென்று உலகம் பழியாமைப்பொருட்டுத் தமிழ்மக்களாயுள்ளார் அனைவரும் ஒருமுகமாக உழைத்தல்வேண்டும். இப் பெருமுயற்சியில், எனது ஆற்றலுக்கேற்றபடி உழைத்துவருகின்றேன். தமிழ் அகராதிக்குரிய மூலநூல்களை யொவ்வொன்றாக வெளியிடக் கருதுகின்றேன். இறைவன் திருவருள் முன்னிற்க.

என்னை யுணர்ந்த விளம்பருவ முற்கொண்டே
புன்னை யுயிரெனக்கொண் டோம்பினேங் —மன்னுபுகழ்த்
தெய்வத் தமிழன்னைதன் சேவடிக்கே யாளாக்கி
யுய்விக்கக் கொள்வா யுளம்.

சென்னை,
20—4—31.

S. வையாபுரிப்பிள்ளை,
தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்.

---

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் (விசாகப்பெருமாளையர் பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை) ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 3. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் ... (நச்சினார்க்கினியருரை உரையாசிரியருரையுடன்) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அழகாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| * | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | கணநூல் (5) இனியவைநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதிச்செய்யுட்கள் ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11.* | விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21.* | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | | | |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23.* | விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திரநூறுபாட்டுக்குரை ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடுந் தமிழும் ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |

## வேறுபதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வஞ்சிமாநகர் ... ... ... | 0 | 8 | 0 |
| 2. | ஜோதிமாலை (தமிழ்நாவல்) ... ... | 0 | 4 | 0 |
| 3. | சிவஞானசுவாமிகள்மீது இரட்டைமணிமாலை ... | 0 | 1 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 28 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.